விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 120 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 04 புதன்கிழமை (17.04.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## காதலியையும் அவரது தாயையும் கொடூரமாக வெட்டிய பின்
## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்
### பண்டத்தரிப்பில் பரபரப்பு

(இளவாலை)

பண்டத்தரிப்பு தாழையடிப் பகுதியில் காதலியையும் காதலியின் தாயாரையும் கத்தியால் வெட்டிய பின்னர் காதலனும் விபரீத முடிவெடுத்து உயிரிழந்த சம்பவமொன்று பதிவாகியுள்ளதாக இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

பனிப்புலம் பகுதியினைச் சேர்ந்த 36 வயதான குணதிலகம் பிரணவன் எனும் இளைஞன் பண்டத்தரிப்பு தாழையடிப் பகுதியைச்

15

### மின்சாரம் தாக்கியதில்
## முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெரும மரணம்




(கொழும்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெரும மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

வீட்டில் இரண்டு மின்சுற்றுகளை இணைக்கச் சென்றபோது மின்சாரம் தாக்கியதில் அவர் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்

15

### எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்
# பெரமுன - ஐ.தே.க இணைந்து பொதுச் சின்னத்தில் போட்டி?
## ரணிலுடன் இணக்கப்பாடு




- ஏனைய கட்சிகளை இணைத்து பரந்த கூட்டணி தொடர்பில் ஆராய்வு.
- கொள்கையளவில் உடன்படிக்கை, இணக்கப்பாடு தொடர்பில் தொடர்ந்து பேச்சுவார்த்தை.

(15ஆம் பக்கம் பார்க்க)



## சர்வோதய ஸ்தாபகர்
### ஆரியரத்ன காலமானார்



15

### புத்தாண்டு காலத்தில்
## 20 விபத்து; 23 பேர் பலி

(கொழும்பு)

சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற 20 வாகன விபத்துக்களில் 23 பேர் பலியாகியுள்ளனர். அத்துடன், 134 பேர் காயம் அடைந்துள்ளனர்.

15

## தமிழரசுக் கட்சியின் செயற்குழு வெள்ளியன்று கூடுகின்றது
### பொது வேட்பாளர், வழக்குகள் தொடர்பில் ஆராயப்படும்

(வவுனியா)

இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மத்திய செயற்குழு கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சி முகங்கொடுத்துள்ள வழக்குகள் தொடர்பிலும் ஜனாதிபதித் தேர்த

15

## ஜனாதிபதி வேட்பாளரை பெயரிடுவது மிகவும் சவால் மிக்க விடயம்
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரை பெயரிடுவது மிகவும் சவால் மிக்க விடயமாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15

## தனியாருடன் இணைந்து சேவையில் ஈடுபட முடியாது
### இ.போ.சபையின் வடக்கு குழுமம்

(யாழ்ப்பாணம்)

யாழில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நெடுந்தூர பயணிகள் பேருந்து தரிப்பிடத்தில் இருந்து தனியார் பேருந்துகளுடன் இணைந்த சேவையை வழங்க முடியாது என இலங்கை போக்குவரத்துச் சபையின் வடமாகாண குழுமத்தின் தலைவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக கட்டப்பட்ட நெடுந்தூர பயணிகள் பேருந்து நிலையத்தில் இருந்து வெளி

15

## யாழில் இரு கைதிகள் தப்பியோடிய நிலையில் மீண்டும் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையிலிருந்து சாவகச்சேரி நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட கைதிகள் இருவர் தப்பியோடிய நிலையில் கைது

15

### வெடுக்குநாறி விவகாரம்
## மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

(வவுனியா)

சிவராத்திரித் தினத்தன்று வெடுக்குநாறிமலையில் இடம்பெற்ற சர்ச்சை தொடர்பாக வவுனியா பிராந்திய மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்று விசாரணைகளை முன்னெடுத்தது.

விசாரணைக்கு தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், ஆலயத்தின் செயலாளர் மற்றும்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி மன்மதராஜன் உதயஸ்ரீ

(ஓய்வு நிலை உத்தியோகத்தர் – யாழ். மாநகர சபை)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் இல.48, பூமகள் வீதி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மன்மதராஜன் உதயஸ்ரீ அவர்கள் 15.04.2024 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்து விட்டார்.

அன்னார் கணபதிப்பிள்ளை - புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற மனுவேல் மன்மதராஜன் (ஓய்வுநிலை - மேற்பார்வையாளர் யாழ். மாநகர சபை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மனுவேல் - நேசமலர் தம்பதியினரின் அன்பு மருமகளும் மதீஷன்(சாரதி பயிற்சி போதனாசிரியர்), திவோஷன்(ஊழியர் North Gate Jetwing), சியாம்ஷன் (பழைய மாணவன் பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகலா(ஜேர்மனி), நந்தபாலா(ரம்மிஸ் ஸ்பொட் உரிமையாளர்), குகபாலா(அமெரிக்கா), காலஞ்சென்ற சத்தியபாலா மற்றும் விஜயபாலா (ஆசிரியர் - மானிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுந்தரலிங்கம் (ஜேர்மனி), யசோதரா(கைதடி விக்னேஷ்வர வித்தியாலயம்), ராஜினி(அமெரிக்கா), சர்மிளா, மங்களநேசன்(முன்னாள் மாநகர சபை உறுப்பினர்), அருணாயோகநேசன் (விஜயா வீடியோ உரிமையாளர்), சாந்தி(சுவிஸ்), சுரேஷ்நேசன்(சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), வித்தியானந்தநேசன் (பிரதிப் பணிப்பாளர் - புள்ளி விபரவியல் திணைக்களம் - மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை (17.04.2024) இன்று புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லூர் பரியாக்கோப்பு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். (469)

இல.48, பூமகள் வீதி,
அரியாலை.
077 725 5505
076 177 3357

தகவல்: பிள்ளைகள்
மதீஷன், திவோஷன், சியாம்ஷன்

# தோட்டத் தொழிலாளர்களுடன் ரணில் சந்தித்து கலந்துரையாடல்



(நுவரெலியா)

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் தொடர்பில் ஆராயவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நுவரெலியா உடபுஸ்ஸலாவ பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான நீதிமன்ற கோர்ட் லொட்ஜ் தோட்டத்திற்கு நேற்று காலை சென்ற போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

Peko Trail பாதையினூடாக ஜனாதிபதி நடைபயணமாக இப்பகுதிளை மேற்பார்வை செய்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

"Peko Trail" என்பது இலங்கையின் மத்திய மலைப்பகுதிகளூடாகச் செல்லும் 300 கிலோ மீற்றர் மலையேறும் பாதையாகும். ஆசியாவின் மிக ரகசியமான பாதைகளில் இதுவும் ஒன்றாகும்.

Peko Trail பாதையினூடாக 3.2 கி.மீ தூரத்திற்கு நடைப் பயணமாக சென்ற ஜனாதிபதி கோர்ட் லொட்ஜ் தோட்ட மக்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார். (ம-7)


## தேவை

இலகு ரக வாகனம் ஓடத் தெரிந்தவர் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (474)

தொடர்புகளுக்கு :
070 719 5424

## லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை. (476)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்


யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (475)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்



36 வருடங்களாக எமது சபையில் கடமையாற்றி இன்றில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும்

## திரு.மனுவேல் யேசுநாதன்

(நீர் இயந்திர இயக்குநர்)

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடும் சுகதேகியாகவும் வாழ பிறந்த நாளில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

BEST WISHES

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் தென் மேற்கு
பிரதேச சபை, மானிப்பாய் (C-0155)

# சேவைநலன் பாராட்டு



18 வருடங்களாக எமது சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்

## திரு.முருகேசு இரசேந்திரம்

(சுகாதார தொழிலாளி)

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடும் சுகதேகியாகவும் வாழ அவரது ஓய்வுக் காலம் மகிழ்ச்சிகரமாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

BEST WISHES

ஊழியர் நலன்புரிச் சங்கம்
வலிகாமம் தென் மேற்கு
பிரதேச சபை, மானிப்பாய்

# மணிவிழா வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்



## திருமதி மாலினி பாலச்சந்திரன்

கணித ஆசிரியர் (உப அதிபர்)

கற்றறிந்த கணித வித்தையினை கண்ணியமாக கற்பித்து
கல்விப் பணியே கடவுட் பணியென
எண்ணிலா மாணவருக்கு எளிதாய் போதித்து
வாழ்வில் ஏணியாய் ஏற்றி வைத்த எங்கள் கலை ஒளியே
எந்நாளும் நல் ஆரோக்கியத்துடன் நீண்ட ஆயுளோடும்
மகிழ்ச்சியோடும் நீடூழி வாழ வாழ்த்துகிறோம்.

எமது கல்லூரியில் பன்னிரண்டு வருடங்களாக ஆசிரியராகவும் உப அதிபராகவும் சிறப்பாக பணியாற்றி 17.04.2024 இல் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி **மாலினி பாலச்சந்திரா** அவர்கள் ஓய்வுக்காலத்தில் மகிழ்வாக வாழ வேண்டும் என மனதார வாழ்த்தி நிற்கின்றோம்.

Best Wishes!

(470)

பாடசாலைச் சமூகம்
யா/அராலி வள்ளியம்மை ஞாபகார்த்த வித்தியாசாலை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் மே,11.12.2024.

(சி-149)


# மின்னல் தாக்கி முதியவர் பலி

(கொழும்பு)

அத்திமலே, கொட்டியாகல பிரதே சத்தில் நேற்று முன்தினம் மின்னல் தாக்கியதில் முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். வயலில் வேலை செய்து கொண்டிருந்த வேளையிலேயே அவர் இவ்வாறு மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் உயிரிழந்தவர் 65 வயதுடைய கெகெலான, கொட்டியாகல பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது குறித்த மேலதிக விசாரணைகளை அத்திமலே பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# இத்தாலி சொகுசுக் கப்பல் இலங்கைக்கு


(கொழும்பு)

இத்தாலி நாட்டுக்கு சொந்தமான கொஸ்டா டெலிசியோசா என்ற சொகுசு ரக பயணிகள் கப்பல் நேற்று முன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளது. குறித்த கப்பலில் 1,978 பயணிகளும், 906 பணிக் குழாமினரும் நாட்டை வந்தடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த கப்பல் ஊடாக பிரித்தானியா ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள சுற்றுலா பயணிகள் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தனர். (நி)

# ரணில் - மகிந்த

## விரைவில் முக்கிய சந்திப்பு



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையிலான விசேட சந்திப்பு அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ உட்பட அந்த கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளுமன்றத் தேர்தலைப் பெறும் மொட்டுக் கட்சியின் முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

அதேபோல் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் மொட்டுக் கட்சி இரு அணிகளாகப் பிளவுபட்டு நிற்கின்றது.

இந்த நிலையில், ஜனாதிபதி ரணிலுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு வழங்க வேண்டும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க உள்ளிட்ட அமைச்சர்கள் வலியுறுத்தி வருவதுடன்மேற்படி சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இதன்போது ஜனாதிபதித் தேர்தல் குறித்த மொட்டுக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்பது ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாகத் தெரியப்படுத்தப்படும் என அறிய முடிகின்றது. (நி)

# ஈரான் ஜனாதிபதி இலங்கைக்கு

(கொழும்பு)

நீர் மற்றும் எரிசக்தி திட்டங்களை திறந்து வைப்பதற்காக இம் மாதம் 24 ஆம் திகதி ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டயரபா மற்றும் புஹுல்பொல ஆகிய இரண்டு அணைக்கட்டுகளை உள்ளடக்கிய உமா ஓயா பல் நோக்கு திட்டம் மற்றும் 25 கிலோமீற்றர் நீர்ப்பாசன சுரங்கப்பாதையும் எதிர்வரும்மே மாதம் ஈரான் ஜனாதிபதி திறந்து வைக்கவுள்ளார். இந்தத் திட்டத்தில் தலா 60 மெகாவாட் திறன் கொண்ட இர ண்டு பெரிய நீர்மின் நிலையங்களும் நிர்மாணிக்கபட்டுள்ளன.

உமா ஓயா பல்நோக்கு திட்டம் இலங்கையில் ஈரானிய நிறுவனங்களின் மிகப்பெரிய தொழில்நுட்ப மற்றும் பொறியியல் சேவை திட்டங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

5,000 ஏக்கர் விவசாய நிலங்களுக்கான நீர்ப்பாசனத்தை மேம்படுத்துவதும், 145 மில்லியன் கன மீற்றர் நீரினை கொண்டு செல்லல், ஒரு வருடத்தில் 290 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதும் இத் திட்டத்தின் நோக்கமாகும். (நி)

# மருதமடு மாதாவின் முடிக்குரிய நூற்றாண்டு விழாவின் யாழ் வருகையில் கரவெட்டி பங்கிற்கான வருகை

### பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



மருதமடு அன்னையின் முடிசூட்டு விழாவின் 100ஆவது ஆண்டு யூபிலி விழாவிற்கு ஆயத்தமாக யாழ். ஆயரின் வேண்டுகோளுக்கு அமைவாக மருதமடு அன்னையின் திருச்சுரூபமானது யாழ்.மறைமாவட்டத்தில் உள்ள பங்குகளுக்கு எடுத்துவரப்படும் நிகழ்ச்சி நிரலில் 17.04.2024 ஆம் திகதியாகிய இன்று எமது கரவெட்டிப் பங்கின் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்து வரப்படும் இப்புனித நிழ்வுக்கு ஆசிச்செய்தி கூறுவதில் அகமிக மகிழ்கின்றேன்.

வடமராட்சியின் மிகத் தொன்மை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றான எமது ஆலயத்திற்கு இற்றைக்கு 50 வருடங்களுக்கு முன்னர் 1974 ஆம் ஆண்டு மருதமடு அன்னையின் தரிசிப்பு இடம்பெற்றமை இங்கு நினைவுகூரத்தக்கது.

இன, மொழி, சமய பேதமின்றி எல்லோருக்கும் அன்னையாக விளங்கி அருள் பாலிக்கும் எம் மருதமடுத் தாயாரின் இப்புனித நிகழ்வு தகுந்த ஆயத்தத்துடன் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்பட வேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் ஆசித்து நிற்கின்றேன். மேலும் மருதமடு அன்னையின் அருளும் ஆசீரும் உங்கள் எல்லோருக்கும் நிறைவாகக் கிடைக்க வேண்டுமென வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**Rev.Fr.C.Justin**
parish priest,
St.Antony's Church,
Nelliady, Karaveddy.

### "மடு" அன்னையின் வரலாறு

மடு அன்னை கன்னிமேரியின் ரோமன் கத்தோலிக்க தேவாலயம் ஆகும். இது மன்னார் மாவட்டத்தில் மடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. 400 ஆண்டுகள் பழமையான இத் தேவாலயம் இலங்கை தமிழ் மற்றும் சிங்கள கத்தோலிக்கரின் புனித வழிபாட்டுத் தலமாக விளங்குகின்றது.

ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெறும் இவ்வாலயத்தின் வருடாந்த உற்சவத்தில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் மக்கள் இன, மத பேதமின்றி கலந்து கொள்வர். இனப்போரின் தாக்கத்தினால் இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் இவ்வாலயச் சுற்றுவட்டத்தில் அகதிகளாக தஞ்சமடைந்திருந்தனர். ஏப்ரல் 2008இல் ஆலயத்தை நோக்கி இலங்கை இராணுவத்தினர் தொடர்ச்சியாக நடத்திய பலத்த எறிகணை வீச்சினால் ஆலயம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இதனால் அங்கு அடைக்கலமடைந்திருந்த மக்கள் அனைவரும் வேறு பாதுகாப்பான இடத்தை நோக்கி இடம்பெயர்ந்தனர். அந்த ஆலயத்தில் இறுதியாகத் தங்கியிருந்த குருக்கள் மற்றும் பணியாளர்களும் அங்கிருந்து வெளியேறினர். இதனை அடுத்து தேவாலயத்தில் 400 ஆண்டுகளாக அருள் பாலித்து வரும் அன்னையின் திருவுருவச் சிலையின் பாதுகாப்புக் கருதி அச்சிலை ஏப்ரல் 4, 2008 இல் மன்னார் தேவன்பிட்டி புனித சவேரியர் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

2011 ஆவணி மாத திருவிழாவிற்கு முன், மன்னார் மேதகு ஆயர் ஜோசப் ஆண்டகை அவர்கள், 2008 இல் ஆரம்பிக்கப்பட்ட அழகிய இரண்டு மாடிக் கட்டடத்தை, குருக்கள் தங்குவதற்காக திறந்து வைத்தார். பல ஆண்டுகளின் பின் இக்கட்டடம் ஒன்றே மடுத்திருப்பதியில் ஸ்தாபிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. 1544ஆம் ஆண்டுக்கு முன்னரே பிரான்சிஸ்கன் சபைக் குருக்களினால் மாந்தையில் வைக்கப்பட்ட மாதா சுரூபம் 500 ஆண்டுகளுக்கு மேலாக இன்றும் மடுவில் மடுமாதா என பக்தர்களால் அன்பாக அழைக்கப்பட்டு அருள்மழை பொழிந்து கொண்டிருக்கின்றார்.

**மடு அன்னையின் சமாதான யாத்திரைகள்**

மடு அன்னையின் திருச்சுரூபம் கீழ்க்கண்ட ஆண்டுகளில் திருச்சுரூப பாதுகாப்பிற்காகவும் மக்களின் நன்மை கருதியும் மடுத்தேவாலயத்தை விட்டு வெளியில் எடுத்துச்செல்லப்பட்டதாக சரித்திரம் கூறுகின்றது.

i. முன்னைய காலத்தில் மடுத்திருப்பதியை நிர்வகித்த கோவில் சக்கிடுத்தார் போன்றோரால் மடுக் கிராமத்தில் பஞ்சம், வரட்சி, நிலவியபோதும் சகல ஊர்மக்களும், இடம் பெயர்ந்த போதும் மடுமாதாவின் திருச்சுரூபம் 5 கி.மீ தூரத்திலுள்ள கள்ளியட்டைக்காடு எனும் விவசாய கிராமத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டதாக பல சான்றுகள் உள்ளன.



ii. இதேபோன்று மடு மாதாவின் பக்தர்களுக்கிடையில் பிணக்குகள் ஏற்பட்டபோது ஒரு பிரிவினரால் மாதாவின் திருச்சுரூபம் முன்னைய ஆண்டுகளில் கள்ளியட்டைக் காட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக பழைய தரவுகள் சான்று பகர்கின்றன.

iii. 1949இல் மடுமாதாவின் முடிசூட்டு விழாவின் முன்னோடியாக செபமாலை ஓதல் எனும் கருப்பொருளில் யாழ் மேற்றிராசணத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

iv. 1974இல் மடுமாதாவின் 50 வருட முடிசூட்டு விழா ஞாபகமாக மனம்திரும்புதல் எனும் கருப்பொருளில் யாழ் மேற்றிராசணத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது.

v. 2000இல் 75 வருட முடிசூட்டு விழா ஞாபகமாக சமாதானம் எனும் கருப்பொருளில் யாழ் மேற்றிராசணத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

vi. 2001இல் இலங்கையின் சமாதானத்தை வேண்டி மன்னார் மாவட்ட ஆலயங்கள், கொழும்பு, அனுராதபுரம், சிலாபம், கண்டி, போன்ற மறைமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

vii. 2009 சித்திரையில் மடு அன்னையின் பழைமை வாய்ந்த புனித சுரூபத்தை கடும் போரில் இருந்து காப்பாற்ற வண பிதா எமிலியானுஸ்பிள்ளை அவர்களால் 21 கி.மீ தூரத்திலுள்ள தேவன்பிட்டி தேவாலயத்திற்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டது.

viii. 2009 ஆவணி 5ஆம் திகதி போர் கிளிநொச்சியை நோக்கி நகர்ந்தபோது, மீண்டும் மடு அன்னையின் திருச்சுரூபம் மன்னார் ஆயர் இல்லத்திற்கு எடுத்து வரப்பட்டது.

ix. 2009 ஆவணி 10ஆம் திகதி இராணுவம் மடுத்தேவாலயத்தை ஆயரிடம் கையளித்தபின் திருச்சுரூபம் மீண்டும் மடு தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

x. 2009 ஆவணி 15ஆம் திகதி மடு தேவாலயம் மந்திரிக்கப்பட்டு மீண்டும் பக்தர்களுக்காக திறந்து விடப்பட்டது.

xi. அன்று முதல் இன்றுவரை இயல்பு நிலையில் அன்னையின் திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.


(C-0152) அனுசரணை: நெல்லியடி வர்த்தக சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ‘போராளி’ பட்லர் ‘ஏமாளி’ கொல்கத்தா

## நரைனுக்கு பதிலடி கொடுத்து ராஜஸ்தான் கலக்கல் வெற்றி



ஐ.பி.எல்., லீக் போட்டியில் பட்லர் "சூறாவளி" சதம்கைகொடுக்க, ராஜஸ்தான் அணி 2 விக்கெட்டுக்களால் "திரில்" வெற்றி பெற்றது. சுனில் நரைன் சதம் வீணானது.

இந்தியாவில் ஐ.பி.எல்., தொடரின் 17ஆவது சீசன் நடக்கிறது. மொத்தம் 10 அணிகள் பங்கேற்கின்றன.

நேற்று நடந்த லீக் போட்டியில் கொல்கத்தா - ராஜஸ்தான் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

கொல்கத்தா அணிக்கு சுனில் நரைன், பில் சால்ட் ஜோடி ஆரம்பம் வழங்கியது. போல்ட் பந்தை பவுண்டரிக்கு அனுப் பிய பில் சால்ட் (10), அவேஷ் கானில் அசத்தல் பிடியெடுப்பில் வெளியேறி னார். அடுத்து நரைன், ரகுவன்ஷி இணைந்தனர். பவுல்ட் வீசிய போட்டி யின் 5வது ஓவரை எதிர் கொண்ட ரகு வன்ஷி, மூன்று பவுண்டரி அடித்து மிரட்டினார்.

போட்டியின் 8ஆவது ஓவரில் பந்து வீச வந்தார் அஷ்வின். இதன் 4, 5ஆவது பந்தில் பவுண்டரி அடித்து அசத்திய நரைன், பின் வந்த சகால் பந்தையும் சிக்சருக்கு அனுப்பினார். ரகுவன்ஷி (30), ஸ்ரேயாஸ் (11) விரைவில் கிளம்பினர். சகால் வீசிய 16ஆவது ஓவரில் ஓட்டமழை பொழிந்தார் நரைன். 2 சிக்சர், 2 பவுண்டரி என அடிக்க, மொத்தம் 23 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

நரைன் 49 வது பந்தில் சதம் எட்டினார். மீண்டும் வந்த அவேஷ் கான், இம்முறை ரசலை (13) அவுட்டாக்கினார். நரைன் 109 ஓட்டங்கள் எடுத்த நிலையில், போல்ட் பந்தில் போல்டானார்.

20 ஓவர்களில் கொல்கத்தா அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 223 ஓட்டங்களைக் குவித்தது.

ரிங்கு சிங் (20) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**பட்லர் கலக்கல்**

கடின இலக்கைத் துரத்திய ராஜஸ்தான் அணிக்கு பட்லர், ஜெய்ஸ்வால் (19) ஜோடி சுமார் ஆரம்பம் வழங்கியது. சஞ்சு சாம்சன் (12), ரியான் பராக் (34) நிலைக்கவில்லை. துருவ் (2), அஷ்வின் (8), ஹெட்மயர் (0) கைகொடுக்கவில்லை. பட்லர் "தனி ஒருவனாக" போராடினார். பாவெல் 13 பந்துகளில் 26 ஓட்டங்கள் எடுத்தார்.

கொல்கத்தாவின் களத்தடுப்பு, பந்துவீச்சு சுமாராக அமைய, ராஜஸ்தான் பக்கம் வெற்றி திரும்பியது. ஹர்ஷித் ராணா வீசிய 19ஆவது ஓவரில் பட்லர், 2 சிக்சர், 1 பவுண்டரி உட்பட 19 ஓட்டங்கள் எடுத்தார். வருண் சக்ரவர்த்தி வீசிய கடைசி ஓவரில், ராஜஸ்தான் வெற்றிக்கு 9 ஓட்டங்கள் தேவைப்பட்டன. முதல் பந்தில் சிக்சர் அடித்த பட்லர், சதம் கடந்து மிரட்டினார். பின் 5ஆவது பந்தில் 2, கடைசி பந்தில் 1 ஓட்டம் எடுக்க ராஜஸ்தான் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்கள் எடுத்து "திரில்" வெற்றி பெற்றது. பட்லர் (107) ஆட்டமிழக்காமல் இருந்தார். (ம-7,10)

**முதல் வீரர்**

ஐ.பி.எல்., அரங்கில் ஈடன் கார்டன் மைதானத்தில் சதம் அடித்த முதல் கோல்கட்டா வீரர் ஆனார் சுனில் நரைன் (109). இது இம்மைதானத்தில் கொல்கத்தா அணி பங்கேற்ற 84வது போட்டி.

* இதற்கு முன் 2008ல் பிரண்டன் மெக்கலம் (158) பெங்களூரு, 2023ல் வெங்கடேஷ் (104) மும்பை மைதானங்களில் சதம் அடித்து இருந்தனர்.

**இது “பெஸ்ட்”**

ஹைதராபாத் அணிக்கு எதிராக 109 ஓட்டங்கள் எடுத்த கொல்கத்தாவின் சுனில் நரைன், "ரி20" கிரிக்கெட்டில் தனது அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தார்.







## கேள்வி அறிவித்தல்
### சபை நிதி மற்றும் மேலதிக முத்திரை தீர்வை வேலைத்திட்டம் - 2024
### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி மற்றும் மேலதிக முத்திரை தீர்வை நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036, E-Mail: pallaips@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 15.00 மணி வரை 17.04.2024 ஆம் திகதியிலிருந்து 30.04.2024 ஆம் வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 17.04.2024 ஆம் திகதியிலிருந்து 30.04.2024 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3,500/= (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 02.05.2024 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/ASD/W/01/2024 | Reconstruction of Thampakamam Vannankerny Uoorellai Road | ASD | 1.19 Mn | 45 நாட்கள் | C9 or C8 | 18,000.00 | 18.07.2024 |
| NP/14/45(3)/PL/CF/W/02/2024 | Reconstruction of Muhamalai Sub Office Road | Council | 3.72 Mn | 60 நாட்கள் | C8 or C7 | 55,000.00 | 01.08.2024 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 24.04.2024 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
பெறுகைக்குழு,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. (C-0156) 17.04.2024



## வேலையாட்கள் தேவை

- மேசன்
- மேசன் உதவியாளர்
- பெயின்ரர் உதவியாளர்
- வெல்டர் உதவியாளர்

(தேவைப்படின் தங்குமிட வசதி, உணவு ஒழுங்கு செய்து தரப்படும்)

தொடர்பு: காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**Mobile:- 077 724 5399** (472)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? அடுத்த சில வாரங்களில் தீர்மானம்-நீதி அமைச்சர் அதிரடி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக போட்டியிடுவதா இல்லையா என்பது குறித்து அடுத்த சில வாரங்களில் தீர்மானம் எடுப்பதாக நம்புவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள் விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் பெரும்பான்மையான மக்கள் இரு தொடர்பில் தன்னிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும் மகா சங்கத்தினரும் ஏனைய சமயத் தலைவர்களும் தன்னிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளதால் அது தொடர்பில் மேலும் சிந்தித்து முடிவெடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். (நி)



## ஓராண்டு பூர்த்தி நினைவு நாள்



17.04 .2024

அமரர்

### ஐயாத்துரை சிவநாதன்

JUNE 18, 1957 - APRIL 29, 2023

வாழ்ந்து பிரிந்து ஓராண்டு நிறைந்தாலும் பிரியாத நினைவோடு பாதம் பணிந்து ஆசி வேண்டுகிறோம் - குடும்பத்தினர்

# ஐ.எம்.எப் பிரதிநிதிகளை சந்தித்த நிதி இராஜாங்க அமைச்சர்

(வோஷிங்டன்)

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கென்ஜி ஒகாமுராவை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளார்.

அமெரிக்காவின் வோஷிங்டனில் நேற்று முன்தினம் ஆரம்பமான சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் அரையாண்டு மாநாட்டின் போது இந்த கலந்துரையாடல்கள் இடம் பெற்றதாக குறிப்பிடப்படுகின்றது.

அங்கு சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கென்ஜி ஒகாமுரா இதன்போது இலங்கைக்கு பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க விடுத்துள்ள செய்திக் குறிப்பில், வேலைத்திட்டத்தின் ஆரம்பம் முதல் சர்வதேச நாணய நிதியம் செய்துள்ள சாதனைகளை தொடர வேண்டியதன் அவசியத்தை அவர்கள் இலங்கைக்கு நினைவுபடுத்தியதாக தெரிவித்தார்.

நாட்டில் சமீபத்திய சமூக-பொருளாதார முன்னேற்றங்கள் மற்றும் ஐ.எம்.எப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் பெரிய பொருளாதார கொள்கைகள் மற்றும் சீர்திருத்தங்களின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான அதிகாரிகளின் அர்ப்பணிப்பு ஆகியவை அங்கு கவனம் செலுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி கிருஷ்ணமூர்த்தி சுப்ரமணியனைச் சந்தித்துள்ளார்.

அங்கு சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது மீளாய்வை முடிப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் கலந்துரையாடியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

## தவறிவிட்டது

06.04.2024 அன்று யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் ஒரு தொகை நகையும் சிறுதொகை பணமும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(466)

077 047 4708/074 098 8423

# இராசிபலன்

17.04.2024
சித்திரை 04, புதன்கிழமை
நவமி முன்னிரவு 6.54 மணிவரை
பூசம் பிற்பகல் 8.46 மணிவரை

சுபநேரம் - 4.34 -6.04 மணிவரை
இராகுகாலம்-12.04-1.34 மணிவரை
ஸ்ரீராம நவமி

சந்திராஷ்டமம்
கேட்டை

வளவன்




மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரச வழியில் அனுகூலமுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், வருமானம் திருப்தி தரும்.




உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய நட்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள்.




நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம், சாமர்த்தியமாகப் பேசி காரியங்களை சாதிக்க வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள்.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொழிலில் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.




திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




பொது வாழ்வில் புகழ்கூடும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.




எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




திட்டமிட்ட பணிகளில் சிறு தடை தாமதங்களைச் சந்திக்க நேரிடலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் கூடும் வாய்ப்புண்டு.




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், உறவினர்களும், நண்பர்களும் வலியவந்து பேசுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.




உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச் சுறுத்தல்கள் அகலும், செய்தொழில் மேன்மையுண்டு.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை கூடும்.

தோல்விகள் மூலம் மேலும் புத்திசாலிகளாகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் முன்னெடுக்கவுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

பாரிய யாழ்ப்பாண அபிவிருத்தி திட்டம் 2024 - 2034 எனும் தொனிப் பொருளில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் முன்மொழியப்பட்ட திட்ட வரைபுகள் தொடர்பிலான இறுதி செய்யும் கூட்டம் யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது

யாழ். மாவட்ட பதில் அரச அதிபர் பிரதீபனின் ஒருங்கமைப்பில் நடைபெற்ற குறித்த கூட்டத்தில் பிரதேச செயலகங்கள் தோறும் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்களின் முன்மொழிவுகள் விரிவாக ஆராயப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்காக இறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

# 'வெண்பா மாலை' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கவிஞர் செல்வராஜா சுதாகரனின் வெண்பாமாலை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொடிகாமம் நட்சத்திர மஹால் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

எழுத்தாளரும் ஓய்வுபெற்ற மாவட்ட சமூக சேவைகள் அலுவலருமாகிய வேதநாயகம் தபேந்திரன் தலைமையில் நடைபெற உள்ள நிகழ்வில் வரவேற்புரையை கைதடி கலைவாணி வித்தியாலய ஆசிரியர் சி.சிவகாந்தன் ஆற்ற உள்ளார்.

அத்துடன் வாழ்த்துரை யாழ். மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ.கிருஸ்ண குமார், வெளியீட்டு, நயப்புரை யாழ். பல்கலைக்கழகத்தின் மேனாள் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா ஆகியோர் ஆற்றவுள்ளனர். (நி)

# சைவசித்தாந்த பண்டிதர் தேர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பால பண்டிதர், சைவ சித்தாந்த பண்டிதர் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படுகின்றன. தகுதியானவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இத்தேர்வுகளின் விபரங்களை அறியவும் விண்ணப்பப்படிவத்தைப் பெறவும் 077 349 2306 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும். அத்துடன் நேரடியாக சைவபரிபாலன சபை, இல.66 கல்லூரி வீதி, நீராவியடி அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 30 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# வலி.வடக்கிலிருந்து யாழுக்கான பேருந்து சேவை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

பொதுமக்களுக்கான போக்குவரத்து சேவையை இலகுபடுத்தும் வகையில் வலிகாமம் வடக்கு வயாவிளான் திக்கம்புரை ரெயிலர்கடை சந்தியில் இருந்து யாழ் நகருக்கான பேருந்து சேவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடற்தொழில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் வயாவிளான் பகுதிக்கு சென்றிருந்த சமயம் குறித்த பகுதி மக்கள் தமது போக்குவரத்து பிரச்சினையின் அசௌகரியங்கள் குறித்து எடுத்துக் கூறி தீர்வை வழங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

மக்களின் குறித்த கோரிக்கைக்கு அமைவாக, அமைச்சரின் பணிப்புக்கமைய வடபிராந்திய போக்குவரத்து சபை அதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு நேற்று குறித்த சேவை அமைச்சினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இப் பேருந்து சேவையானது வயாவிளான் சுதந்திரபுரம் ஊடாக வயாவிளான் மத்திய கல்லூரி, ஈழுகேசரி பொன்னையா வீதிவழியாக குரும்பசிட்டி, கட்டுவன் சந்தி ஊடாக சென்று தெல்லிப்பளை வைத்தியசாலையை அடைந்து கேகேஎஸ் வீதி வழியாக யாழ் நகரை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வறுத்தலைவிளான் சாந்தை சந்தி வரையிலான சேவையை தையிட்டி ஆவளைச் சந்தி வரை நீடிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அந்த சேவையும் ஆரம்பித்துவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-33)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு :1996 - இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 60 சூரி செவ் 7 இல்
உயரம்: 5'11
தகைமை/தொழில்: Super Market(UK)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண், UK விரும்பத்தக்கது
தொ.இ: B/14471

பிறப்பு: 1988 -இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 43
உயரம்:5' 8"
தகைமை/தொழில் Bussiness(Canada)
எதிர்பார்ப்பு: படித்த பெண்
தொ.இ: B/14479

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம் :5' 2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, பட்டதாரி
தொ.இ: B/14481

பிறப்பு: 1985- இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5' 8"
தகைமை/தொழில்:-A/L, Business (own)
எதிர்பார்ப்பு: அழகான, படித்த பெண்
தொ.இ: B/14482

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1993 - இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா-47 1/2 உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: B.Com, MBA,Tutor Mentor
எதிர்பார்ப்பு: படித்த, உத்தியோகமுள்ள ஆண்
தொ.இ: G/13978

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: -28 3/4
உயரம்: 5' 2"
தகைமை/தொழில்: College, Bsc(final year), Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/13990

பிறப்பு -1998 - இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: - 59 உயரம்: 5' 4"
தகைமை/தொழில்: BA
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ இ: G/13996

பிறப்பு -1995 -இந்து
நட்சத்திரம் -ரேவதி
கி.பா:41
உயரம்: 5' 6'
தகைமை/தொழில்: BBA
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், பொறியியலாளர்
தொ.இ: G/13999

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

**பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்**


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 170 | 100 | 140-160 | 150 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 160 | 155 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 130 | 130-160 | 200 |
| தக்காளி | 80 | 100 | 80 | 80-100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 130 | 120 | 100-130 | 150 |
| கோவா | 200 | 160 | 150 | 250 | 280 |
| கரட் | 350 | 400 | 400 | 350 | 450 |
| பூசணி | 160 | 130 | 80 | 90-120 | 160 |
| புடோல் | 140 | 200 | 100 | 100 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 80-100 | 150 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 250 | 200-350 | 350 |
| பெரிய வெங்காயம் | 350 | 350 | 400 | 270 | 300 |
| பாகற்காய் | 250 | 300 | 250 | 300 | 280 |
| வெண்டக்காய் | 120 | 120 | 130 | 100-150 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 200 | 120 | -- | 200 |
| பயற்றங்காய் | 350 | 250 | 150 | 200-350 | 120 |
| லீக்ஸ் | 350 | 300 | 300 | 200 | 300 |
| பீற்றூட் | 200 | 250 | 250 | 250 | 350 |
| கறிமிளகாய் | 350 | 300 | 500 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 350 | 500-900 | 800 |
| போஞ்சி | 400 | 400 | 300 | 250 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | 60 | -- | 140 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 50 | 60-100 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 300 | 400-600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 120 | 100 | 40-100 | 80-120 |
| இராசவள்ளி | 400 | 400 | 300 | -- | 400 |
| வெங்காயப்பூ | -- | 250 | 150 | -- | 400 |
| முள்ளங்கி | 100 | 100 | 80 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 60 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 | 80 |
| [illegible] | -- | -- | 100 | 80 | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரோதி வருட புத்தாண்டுப் பலன்கள்




### ஜாதகர்

இந்த புது வருடம், இந்த ரிஷப இராசியாருக்கு ரொம்ப குதூகலமான வருடம்தான். இராசிநாதன் சுக்கிரன் லாப ஸ்தானத்தில் இருப்பதால் வெகு நன்மைகள் கிடைக்கும். கூட இருக்கும் ராகு, அடிமனதில் புதைந்துள்ள உருப்படாத ஆசைகளையும், அமர்க்களமாக நிறைவேற்றி தருவார். மட்டமான எண்ணங்களை ரசித்து அனுப்பவிப்பீர்கள். இந்த ஆள் மட்டமான பயல், அவன் கூட சேரவே கூடாது என வீட்டில் யாரை நோக்கி எச்சரிக்கிறார்களோ, அவர் கூட சேர்ந்து, உட்கார்ந்து விருந்துண்டு மகிழ்வீர்கள். நிறைய சட்டப்புறம்பான கேளிக்கைகளில் ஈடுபட்டு, ஜென்ம சாபல்யம் அடைவீர்கள். இதனையறிந்த உங்கள் வீட்டினர் நீ எக்கேடோ கெட்டொழி என்று எரிச்சல்படுவர். இந்த வருடம் உங்களுக்கு சாதாரண ஆசைகள் வராது. பேராசைகள் வந்து, உங்களை ஆட்டிப் படைக்கும்.

### தனம்

இந்த வருடம் உங்களின் அனைத்து ஆசைகளும் நிறைவேறும் எனில் அதற்கு பணம் வேண்டு மல்லவா? அத்தனை தேவைக்கும் உரிய பணம் வந்துசேரும். வரும் வழி இருளாகவும் கறுப்பாகவும் இருக்கும். அதனாலென்ன! நாய் விற்ற காசு குரைக்குமா என்ன! பல விதங்களிலும் பணம் வரவழைத்து, சில சமயம் நீங்களே தேவையான பணம், டொலர் இவற்றை அச்சிட்டு, செலவளிக்க ஆரம்பித்து விடுவீர்கள்.

### வாக்கு

பேச்சு சும்மா தடாலடியாக, பச்சை பச்சையாக, லோக்ளாஸ் நிலைமைக்கு இறங்கி பேசுவீர்கள். கேட்பவர்களின் காதில் இரத்தம் வருவது உறுதி. சில ரிஷப இராசியார் இதைப்படித்துவிட்டு எரிச்சல் படலாம். நீங்கள் மட்டமாக பேசாவிட்டாலும், உங்கள் வார்த்தைகள் குதர்க்கமும், குசும்புத்தனமும், நக்கலும் நிறைந்தாக அமையும்.

### குடும்பம்

குடும்பம் என்று சொல்வதைவிட குடும்பங்கள் என்று சொல்வதே சரியாக இருக்கும். நிறைய குடும்ப கார்ட்டில் குடும்பத்தலைவராக இவர்கள் புகைப்படம் இடம் பெறும். காதலிப்பதே முழுநேர தொழிலாக வைத்துக்கொள்வர். இவ்விதம் அமையாவிட்டால், நிறைய ரிஷப ராசியினர் காதல், கலப்பு மணமாக மறுமணம் செய்துகொள்வர்.

### சகோதரம்

நிறைய ரிஷப இராசி குழந்தைகளுக்கு, இளைய சகோதரி பிறக்க வாய்ப்புண்டு. உங்களின் சில இளைய சகோதரர் வெளிநாடு செல்வர். அல்லது அரசியலில் சேர்ந்து விடுவர். வெளிநாட்டு கைபேசி கிடைக்கும். பிறமாகாண பணியாளர்கள் கிடைப்பார்கள். அசால்ட்டான குருட்டு தைரியம் மண்டை முழுக்க வியாபிக்கும். குறுக்கு வழியில் புகழ் சேர்க்க முயல்வீர்கள்.

### வீடு

இந்த வருடம் வீட்டுக்கு மிக அதிகமாக முதலீடு செய்து உங்கள் கனவு இல்லத்தை கட்டுவீர்கள். வேறு சிலர் வீட்டை விற்று, அதனை வெளிநாடு அல்லது அரசியல் சார்ந்து செலவளிப்பீர்கள். உங்கள் தாயார் உங்களின் மூத்த உடன்பிறப்புடன் சென்று விடுவார். ஆரம்பக் கல்வி மாணவர்கள் உயரிய பள்ளியில் இடம் பிடிப்பர். மீனவர்கள், அரசின் ஆபத்து உதவிகளை பெற்று நன்மையும் லாபமும் அடைவர். விவசாயிகள், அரசுமூலம் வேளாண் முன்னேற்றம் பெறுவர். உங்கள் வீட்டில் தண்ணீர் சார்ந்த குழாய் பதிக்கும் வேலை நடக்கும்.

### சந்ததி

இந்த வருடம் கண்டிப்பாக மருமகன்- மருமகள் வருவார். சற்று கலப்பாக அமையும். வாரிசு வேண்டுவோர். மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு பெறுவர். உங்களின் சில வாரிசுகள், அரசியலில் நுழைவர்.

வாரிசுகள் மூலம் வெளிநாட்டுப் பணம் அல்லது கறுப்பு பணம் நடமாட்டம் வீட்டில் அலையும். பங்கு வர்த்தகம் நல்ல லாபம் தரும். முதலில் சறுக்கியது போல் இருந்து பின் பிக்கப் ஆகிக் கொள்ளும்.

கலைஞர்கள், இந்த வருடம் நிஜமாகவே வேலை வாய்ப்பும், புகழும், செல்வச் செழிப்பும், அரசியல்வாதிகள் அனுசரணையும் பெறுவர். டி.வி. கலைஞர்களும் தொடர்ச்சியான வாய்ப்பும் வளமும் பெறுவர். சற்று கிசுகிசு செய்திகள் மட்டும் உங்களை மிக எரிச்சல்படுத்தும். காதல் எண்ணிக்கையை எண்ணி கட்டுபடியாகாது. எல்லா மதம், அனைத்து நாட்டிலும் உங்கள் காதல் கொடி கட்டி பறக்கும். அவ்வளவு ஏன், இந்த ரிஷப இராசியின் வயதானவர்களும் தடுமாறுபவர்.

### நோய்

இந்த வருடம் பாதம் வீங்கிக் கொள்ளக்கூடும். பாதத்தில் நரம்பு பிடித்து கொள்ளவும் செய்யும். சிலருக்கு காலில் விஷக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது.

நிறைய ரிஷப இராசியினர், முன்பு பார்த்த வேலையில் மீண்டும் இணையலாம். சிலர் [illegible] வேலைகள் அல்லது வங்கி வேலை, சினிமாவில் எடிட்டிங், வேலை வெளிநாட்டில் ஆசிரியப்பணி அல்லது கம்யூட்டரில் பாடம் நடத்தும் வேலை என இவை கிடைக்கக் கூடும்.

எதிரிகளின் பெருக்கம் அதிகரிக்கும். எதிரிகள் மிக பலமாகி, உங்கள் கண்ணில் விரலைவிட்டு ஆட்டுவர். கடனும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

### திருமணம்

காதல் கல்யாணம் நிச்சயமாகி கல்யாணம் முடித்துவிட்டு ஓடிப் போகலாம். அல்லது ஓடிப்போய் கல்யாணம் பண்ணிக் கொள்ளலாம். காதல் தொழில் செய்யும் இடத்தில் தொடங்கும். இந்த திருமணம் குடும்பத்திற்கு, மிகுந்த வருத்தம் தரும். இப்போது வியாபாரம் ஆரம்பித்தால், அதில் உங்கள் தந்தையின் உதவி இருக்கும்.

### எதிர்பாராத இடையூறுகள்

இந்த வருடம் வெளியில் இருந்தெல்லாம் உங்களுக்குள்ளந்ததுன்பம்வராது. அப்படியே அரசு அதிகாரிகள் மூலம் தொல்லை ஏற்பட்டாலும், நிறைய செலவுசெய்து அதனை சரிக்கட்டி



விடுவீர்கள். வீடு விடயம் மட்டும் ரொம்ப எச்சரிக்கையாக இருங்கள்.

### அதிர்ஷ்டம்

தர்மகர்மாதிபதி எனும் யோகத்தில் உங்கள் அதிர்ஷ்டம் மிளிர்கிறது. இந்த யோகம் வெளிநாட்டு முதலீடுகளைத் தரும். சட்டத்துக்குப் புறம்பான வருமானம் தரும். உங்கள் எண்ணங்களை ஏதோ ஒரு மட்டமான வழியிலாவது ஈடேற்றி விடும். சேவைத்திலகம் எனும் பட்டம் தரும். வாரித்தரும் வள்ளல் பெருமகன் எனும் சிறப்பை வழங்கும். நீங்கள் யோகம் எனும் வழியில் செகெத்தாக அலைவீர்கள். உண்மையை மட்டும் வாய் திறந்து சொல்ல இயலாது.

### தொழில்

இந்த வருடம் பங்குதாரரைச் சேர்த்துக்கொண்டு, அவரின் முதலீடை கையகப்படுத்தி, உங்கள் பெயரில் தொழில் தொடங்கிவிடுவீர்கள். பங்குதாரர் ஏதாவது கணக்கு கேட்டாலும் கோபமாக பேசினாலும் அவர்களை ஏதோ ஒரு வகையில் சந்தோசப்படுத்துவீர்கள். ஏற்கெனவே தொழில் நடத்திக் கொண்டிருந்தவர்களும். வெளி நாட்டு சந்திப்புகள் மூலம் நல்ல அனுகூலம் பெறுவீர்கள்.

### லாபம்

குறுக்குவழி லாபம் அதிகம் கிடைக்கும். அதற்கும் கொஞ்சம் முதலீடு செய்யவேண்டுமல்லவா! அதற்கு கொஞ்சம் செலவழியும். சிலர் வீட்டை, சினிமா டி.வி போன்றவற்றிற்கும் வாடகைக்கு விட்டு நல்ல பணவரவு பெறுவர். போட்டிகளில் கலந்துகொண்டும் யோக வரவு பெறுவர். சிலர் கைவேலைகள், கைத்தொழில் மூலம் இதுவரை இல்லாத அளவிற்கு, வெளிநாடு வரை விற்பனையாகி நல்ல லாபம் கிடைக்கக்கூடும். பங்கு வர்த்தகமும் நல்ல லாபம் தரும்.

### அரசியல்

ரிஷப ராசியினர் இந்த வருடம் தொடங்கியவுடன் ஒரு அரசியல் கட்சியை ஆரம்பித்து, அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று, தாங்கள் பிறந்தஇடத்தில், ஒரு ரூபாய் செலவளித்து நூறு ரூபாய் லாபம் பெற்று விடுவார். சுற்றியுள்ளவர்கள் இவனுக்கு எங்கே இருந்து இவ்வளவு பணம் கிடைக்கிறது என சுரண்டு போய் விக்கித்துப்போய் விடுவர். வேறென்ன, கறுப்பு பணத்தை வெள்ளையாக்கும் முழு முயற்சியில் இறங்கி விடுவார். இதில் முக்கியமான விஷயம் இவர் விளையாட்டாகத்தான் கட்சி தொடங்குவார். யாரும் எதிர்பாராத விதமாக தேர்தலில் ஜெயித்து பிறரை கதிகலங்கச் செய்துவிடுவார்.

### விரயம் செலவு

இந்த வருடம் இவர் பிறந்த இடத்துக்குத்தான் அதிகமாக பயணம் மேற்கொள்வார். அல்லது பிறந்த ஊரில் ஒரு இடம் விடாமல் சுற்றிக் கொண்டிருப்பார். அது அரசியல் அல்லது அரசுப்பணி அல்லது தந்தை அல்லது மூத்த சகோதரன் என காரணம் ஏதோ ஒன்று இருக்கும். பிறந்த ஊர் அலைச்சலும், செலவும் அதிகமிருக்கும்.

### பரிகாரம்

ஒரு முறை ஸ்ரீரங்கநாத பெருமாளுக்கு சனி + செவ்வாய் சேர்க்கைக்கு வெள்ளிக்கிழமை, வெண் தாமரைப்பூ, சேமியா பாயசம் இவற்றோடு வெள்ளைத் துணியில் 24 மிளகுப் பொட்டலம் கட்டி, தாமரை நூல் திரியில், தேங்காய் எண்ணெய் ஊற்றி தீபமேற்றவும்.

அந்தணர்களில், வேதம் பயிற்றுவிக்கும் ஆசிரியருக்கு, வஸ்திரம் வாங்கிக் கொடுக்கவும்.

இந்த வருடம் ரிஷப இராசியாருக்கு மிக நல்ல நன்மைகளே கிடைக்கிறது. எனவே நீங்கள் 80 சதவிதம் மார்க் வாங்கி விடுவீர்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியாவில் படகு விபத்து சிறுவர்கள் குழு மாயம்



(டில்லி)


இந்தியாவில் படகு விபத்தில் குழந்தைகள் உட்பட சிறுவர்கள் குழுவொன்று காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் பகுதியில் உள்ள ஜீலம் ஆற்றில் படகு ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

கந்தபாலிலிருந்து பத்வாரா நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் காணாமல் போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (நி)

## சிங்கப்பூர் பிரதமர் இராஜினாமா



(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் பிரதமர் லீ சியென் லூங் (வயது 72) தலைமையிலான மக்கள் செயல் கட்சி ஆட்சி நடைபெற்று வருகிறது.

நாட்டின் 3 ஆவது பிரதமரான இவர் கடந்த 2004 முதல் மக்கள் செயல் கட்சியின் பொதுச்செயலாளராகவும் இருந்து வருகிறார்.

சமீபகாலமாக இந்த கட்சியின் மந்திரி மற்றும் எம்.பி.க்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

இதன்காரணமாக 2 எம்.பி.க்கள் தங்களது பதவியை ராஜினாமா செய்தனர்.

இந்தநிலையில் பிரதமர் லீ சியென்னும் அடுத்த மாதம் (மே) 15 ஆம் திகதி தனது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

மேலும் தான் பதவி விலகும் அதேநாளில் லாரன்ஸ் வோங் பிரதமராக பதவியேற்பார் எனவும் அவர் கூறி உள்ளார்.

இதுகுறித்து சமூக வலைத்தளத் தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் எந்தவொரு நாட்டுக்கும் தலைமை மாற்றம் ஒரு முக்கியமான தரு ணம் என அவர் தெரிவித்துள்ளார்.

# இதுவரை யாருமே

# ஆயுதங்களை உ

## இஸ்ரேலை மிர

(டெஹ்ரான்)

**இன்னொரு முறை இஸ்ரேல் தங்களைத் இதுவரை யாருமே பயன்படுத்தாத ஆயுதத் எடுப்போம் என்று ஈரான் எச்சரித்துள்ளது.**

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இஸ்ரேல் இராணுவத் தலைவர் ஹெர்ஸி ஹலேவி அளித்த பேட்டியில், "ஈரானின் ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்போம். பிரதமர் நெதன்யாகுவின் முடிவுக்காகக் காத்திருக்கிறோம்" என்று கூறியிருந்தார்.

இதற்குப் பதிலளித்துள்ள ஈரான் வெளியுறவு அமைச்சர் அலி பகேரி "இன்னொரு முறை இஸ்ரேல் எங்களைத் தாக்கினால், நொடிகளில் பதிலடி கொடுக்கப்படும். அதுவும் இதுவரை பயன்படுத்தப்படாத ஆயுதங்களை உபயோகிப்போம்" என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்ரேலின் சேனல் 12 செய்தியின்படி, ஈரானுக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும் ஆனால் அது முழுமையான போருக்கு வித்திட்டு விடக் கூடாது என்ற வகையில் போர் விவகாரங்கள் அமைச்சகம் ஆலோசனை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் மீது ஈரான் கடந்த ஞாயிறு காலை சுமார் 300 ஏவு

## சிட்னியில் மீண்டும் வன்முறை

### தேவாலயத்தில் கத்திக்குத்து தாக்குதல்

### பலர் படுகாயம்

(சிட்னி)

சிட்னியில் கிறிஸ்தவ தேவாலயமொன்றில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் கிறிஸ்தவ மதகுரு உட்பட பலர் காயமடைந்துள்ளனர்.

சிட்னியின் தென்மேற்கு பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் ஆராதனைகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த வேளை நபர் ஒருவர் திடீரென முன்னோக்கி சென்று மதகுருவை பல தடவை கத்தியால் குத்தியுள்ளார்.

மார் மரி இமானுவெல் என்ற ஆயர் ஆராதனைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை நபர் ஒருவர் அவரை நோக்கி பல தடவை கத்தியால் குத்தியுள்ளார்.

பின்னர் அங்கு காணப்பட்டவர்கள் மீதும் அந்த நபர் கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்.

தேவாலயத்தில் ஆராதனைகளை நேரடியாக ஒலிபரப்பு செய்யப்பட்டுக்கொண்டிருந்த தருணத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## மின்னல் தாக்கியதில் 39 பேர் உயிரிழப்பு

### பாகிஸ்தானில் துயரம்

(டாக்கா)

தென்மேற்கு பாகிஸ்தானில் பெய்த கனமழை மற்றும் மின்னல் தாக்கியதில் 39 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகம் தெரிவித்துள்ளது.

பாலானோர் விவசாயிகள் என்றும், அறுவடை செய்துகொண்டிருந்த போது மின்னல் தாக்கியதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் கனமழை காரணமாக ஏராளமான விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்துடன் மின்சார விநியோகம் மற்றும் போக்குவரத்து சேவைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் 2022 ஆம் ஆண்டில், பாகிஸ்தானை பாதித்த வெள்ளத்தால் ஏற்பட்ட விபத்துக்களால் 1700 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# மே பயன்படுத்தாத

# உபயோகிப்போம்

## மிரட்டும் ஈரான்


### ாத் தாக்கினால்
### தத்தை கையில்



கணைகள் மற்றும் ட்ரோன் குண்டுகளை வீசியது. சுமார் 5 மணி நேரம் நடந்த இந்தத் தாக் குதலில் 99 சதவீதத்தை நடு வானில் இடைமறித்து அமெரிக்க மற்றும் இஸ்ரேலியப் படைகள் அழித்தன. இஸ்ரேல் மீது ஈரான் ஏவிய ட்ரோன்களில் 80-ஐ அமெ ரிக்கா வீழ்த்தியது. ஈரான், ஏமனில் இருந்து ஏவப்பட்ட 6 ஏவுகணைகளை வீழ்த்தியது. இந்த தாக்குதல் 3 ஆம் உலகம் போருக்கு வழி வகுக்கும் என அஞ்சப்படுகிறது.

"மத்திய கிழக்கு பிராந்தியமோ அல்லது இந்த உலகமோ இன்னொரு போரைத் தாங்காது. அமைதியை நிலைநாட்டும் கூட்டுப் பொறுப்பு நம் அனைவருக்கும் இருக்கிறது" என்று ஐ.நா. பொதுச் செயலாளர் அண்டோனியோ குத்ரேஸ் கவலை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## 20 சிதைந்த சடலங்களுடன் கரை ஒதுங்கிய படகு



(பிரேசில்)

பிரேசிலின் பாரா மாநிலத்தில் இருந்து 185 மைல் தொலைவில் கரை ஒதுங்கிய சிறிய படகில் பல உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி சுமார் 20 சிதைந்த சடலங்கள் இருந்ததாகவும் எனினும் இங்குள்ள மொத்த சடலங்களின் எண்ணிக்கையை வெளியிட முடியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரேசில் அட்டர்னி ஜெனரல் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், படகு எந்தப் பகுதியில் இருந்து வந்தது என்பது இதுவரை வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பில் குற்றவியல் மற்றும் சிவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என சட்டமா அதிபர் அலுவலகத்தின் அறிக்கையை மேற்கோள்காட்டி பிரேசில் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டில், இறந்த உடல்களுடன் குறைந்தது ஏழு படகுகள் பிரேசில் மற்றும் கிழக்கு கரீபியனுக்கு வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## செல்போன் டவருக்கு பதிலாக

# செயற்கைக்கோள்

### சீனா சாதனை



(பீஜிங்)

செல்போன் டவர்கள் இல்லாமல் நேரடியாக செயற்கைக்கோள் மூல மாக ஸ்மார்ட் போன்களில் பேசும் வசதியை கொண்டு வர சீனா ஆய்வு மேற்கொண்டது.

இதற்காக டியான்டாங்-1 என்ற செயற்கைக் கோள்களை விண்ணுக்கு அனுப்பி 2016 ஆம் ஆண்டு முதல் சோதனையை நடத்தி வந்தது. இந்த சோதனை வெற்றி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி தரையில் செல்போன் கோபுரங்கள் இல்லாமல் செல்போன்களில் பேசலாம் என்று கூறப்படுகிறது. ஸ்மார்ட் போன் தகவல் தொடர்பு அமைப்பில் செயற்கைக் கோள் இணைப்பை அடைவதில் சீன விஞ்ஞானிகள் புதிய சாதனை படைத்துள்ளதாக தெரிவித்தனர்.

இதன் மூலம் ஆசியா - பசுபிக் பிராந்தியம் முழுவதும் மொபைல் செயற்கைக் கோள்கள் வழியாகவே ஸ்மார்ட் போன்களில் பேச முடியும்.

தரையில் உட்கட்டமைப்பு இன்றி நேரடியாக செயற்கைக்கோள் மூலமாகவே பேசமுடியும் என்பதால், நிலநடுக்கம், சூறாவளி போன்ற இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும்போது கூட எந்த இடையூறும் இன்றி தொலைத் தொடர்பு இருக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

இதனால் இத்திட்டம் உலகம் முழுவதும் பிரபலம் ஆகும் என்று விஞ்ஞானிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். (நி)

## ஓமானில் கனமழை 17 பேர் உயிரிழப்பு



(ஓமான்)

ஓமானில் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் பெய்த கனமழையால் ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக 17 பேர் உயிரிழந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், ஓமானின் பல பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களை மூட ஓமான் அரசு முடிவு செய்துள்ளது.

அத்துடன் கடும் மழை காரணமாக பல கார்கள் மற்றும் உடைமைகள் சேதமடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்காசிய நாடுகளின் காலநிலை மாற்றம் பற்றிய தற்போதைய மாநாடு




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

தற்போதைய காலநிலை அதுவும் அதிகரித்த உஷ்ணம் என்பதனை அனைத்து நாடுகளும் உணரத் தலைப்பட்டிருக்கின்றன. இந்த கால நிலையில் ஏற்பட்டிருக்கும் மாற்றமானது தென்கிழக்காசிய நாடுகளில் இன்னும் அதிகமாக உணரப்பட்டிருப்பதுடன் அதனது விளைவுகளையும் கணிக்கத் தொடங்கியிருக்கின்றன. இந்த காலநிலை மாற்றத்தின் விளைவுகளையும் இதுவரை அந்தந்த நாடுகளில் காலநிலை மாற்றத்தினை குறைப்பதற்காக அல்லது தடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட பொறிமுறைகளின் நடைமுறைப்படுத்தப்பட்டவை மற்றும் விளைவுகளை கலந்தாய்வதற்காக மூன்று நாள் மாநாடு நேற்றைய தினம் பங்களாதேசின் தலைநகரான டாக்காவில் ஆரம்பித்திருக்கின்றது.

எமது நாட்டிலிருந்து பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீட பேராசிரியர் புத்திமாரம்பே அவர்களும் பத்தலகொடநெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிர் உருவாக்குனர் கலாநிதி கருணாரத்த அவர்களும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திலிருந்து இவர்களுடன் மூவரணியில் ஒருவனாக கலந்துகொண்டு பங்களாதேஷ் டாக்காவிலிருந்து இந்த விபரங்களைத் தருவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.




அமெரிக்காவின் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தின் உலகளாவிய திட்டங்களின் அனுசரணையுடன் அதன் ஓரங்கமாக இந்த மாநாடு பங்களாதேஷ் நாட்டின் உயரிய நிறுவனமான பங்களாதேஷின் எதிர்கால பண்ணைச் செய்கை (Future Farming Bangladesh) என்னும் நிறுவனத்துடன் கூட்டுச் சேர்ந்து தென்கிழக்காசிய நாடுகளிலிருந்து வருகை தந்த கால நிலை மாற்றத்தில் புலமையாளர்களைக் கொண்ட பலருடன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, மியன்மார், நேபாளம் இவர்களுடன் அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழக பேராசிரியர்கள் புலமையாளர்கள் பலரும் கலந்து தங்களது கருத்துக்களையும் திட்டங்களையும் விபரிக்கின்றனர். அந்தந்த நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து திட்டங்களையும் அலசி ஆராய்ந்து எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்த வேண்டியனவற்றை அனுபவத்துடனான திட்டமிடல்களை செய்வதன் மூலம் நிறைவேற்ற முயற்சிக்கின்கின்றனர்.

எமது நாட்டின் வடபகுதியில் காலநிலை மாற்றம் இதுவென தற்போது நாங்கள் பலரும் உடலால் உணரும் நிலைக்கு உடலெரிவு, வரண்டகாற்று, சுட்டெரிக்கும் வெய்யில், பகலில் மட்டுமல்ல இரவிலும் தகிக்கும் உஷ்ணம் என்பன ஏற்படுத்தியிருக்கின்றன. இவற்றின் தாக்கம் பலருடைய உடல் நிலைமையை நோய் வாய்ப்படுத்தும் நிலைக்கு இட்டுச் செல்லுமோ எனும் பயமும் பீதியும் உருவாகியிருக்கின்றது. ஏற்கெனவே ஊட்டச்சத்து குறைவான மக்களுக்கும் நோயெதிர்ப்புத் தன்மை நலிவானவர்களுக்கும் இந்த மாற்றம் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். ஆதலால் நாம் கவனமாக இருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப் பட்டிருக்கின்றது. அதிகளவில் நீர ருந்துவதன் மூலம் உடலை குளிர் மையாகவும் உடலுறுப்புக்களை பாதிப்பின்றியும் பாதுகாத்துக் கொள்ளலாம். வெளியில் வெயிலில் நடமாடுவதனை இயன்றவரை தவிர்க்கவும் அறியத்தந்திருக்கின்றார்கள்.

அதிகரித்த வெப்பநிலை எமது பிரதேசத்தில் இன்னும் அதிகரித்து செப்டெம்பர் மாதம் வரை எம்மை வாட்டி வதைக்கப் போகின்ற தென்பதனை கட்டியங் கூறியும் உள்ளனர். இவற்றுடன் அதிகரித்த வறட்சி இதனால் நிலத்தடி நீருக்கான தட்டுப்பாடு. மழை பெய்யும் போது ஏற்படும் கட்டுக்கடங்காத வெள்ளப்பெருக்கு. வெள்ளப் பெருக்கினால் மலைப்பகுதிகளில் ஏற்படும் நிலச்சரிவு. மண்ணில் ஊட்டச்சத்தினளவு இழப்பு. கடற்கரையோரத்தில் கடல்நீர் உட்புகுவதால் ஏற்படும் உவர்தன்மை, பயிர்செய்யும் நிலங்களின் வளக் குறைபாடு. இப்படிப் பலவகையான தாக்கங்கள் எம்மில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் இன்னமும் மக்களுக்காக உணவுற்பத்தியில் திறந்த உள்ளத்துடன் பயிர்செய்யும் விவசாயப் பெருமக்களை காத்திடும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமையளிக்கப்படல் வேண்டும்.

காலநிலை மாற்றத்தின் நிலைமைகள் உன்னிப்பாக அவதானிக்கப்படுவதன் அவசியம் பல்வேறு மட்டங்களில் உணரப்பட்டிருக்கின்றது. குறிப்பாக அனைத்து விவசாய பெருமக்களுக்கும் விவசாயஞ் சார் தொழிற்றுறைக்கும் இந்த செய்திகள் விரைந்து குறித்த நேரத்திற்கு முன்பாகவே சென்றடைய வேண்டும். தற்போதிருக்கும் தொழினுட்பங்களைப் பயன்படுத்தி மிகவும் துல்லியமாக காலநிலை மாற்றம் அதனது விளைவுகள் கணித்தறியப்பட்டால் மாத்திரமே எதிர்கால விவசாயத்தையும் விவசாயியையும் காப்பாற்ற முடியும். உலகளாவியரீதியில் விஞ்ஞான தொழினுட்பத்தை பயன்படுத்தி பெறப்படும் தகவல்கள், செய்மதிகளிலிருந்து பெறப்படும் தகவல்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி பெறப்படும் கணிக்கப்படும் தகவல்கள் அனைத்தும் தொகுக்கப்பட்டு அவற்றை விவசாயப் பெருமக்களுக்கு சந்தைப் படுத்துனர்களுக்கு, தொழிற்றுறைக்கு இன்னும் அனைத்து மக்களுக்கும் பகிரப்பட வேண்டும்.

இதற்காக எமது பிரதேசத்து ஊடகங்களை இணையவழித் தகவல் பரிமாற்றங்களையும் பயன்படுத்த முடியும். [illegible] அனைத்து மக்களின் பயன்பாட்டிலிருக்கும் மொபைல் தொழிநுட்பத்தின் செயற்பாட்டையும் பயனுள்ளவாறு விரிவுபடுத்த வேண்டும். வருமுன் காத்தல் என்னும் கோட் பாட்டுக்கிணங்க அதீத தொழினுட்பத்தின் பயன்பாட்டை இன்னும் விசாலித்து மாணவர்களுக்கு அறிவூட்டுவது மட்டுமின்றி அவர்களை இந்த செயன்முறைக்குள் உள்ளீர்க்கும் செயற்பாட்டையும் செய்தல் வேண்டும். கல்விச் சீர்திருத்தம் நடைபெறும் இக்காலகட்டத்தில் பயனுள்ளதாக மாணவர்களுக்கான அறிவு ரீதியாகவும் அனுபவ ரீதியாகவும் அவர்களை காலநிலை மாற்றத்தின் செயலணிக்குள் உள்ளடக்கியதாக திட்டங்களும் தீட்டப்படல் வேண்டும். அனுவப ரீதியான கல்வியின் வரிசையில் காலநிலை மாற்றத்திற்கு எதிர்காலத்தில் முகங்கொடுக்கும் வருங்கால மாணவ சந்ததியை இப்போதிருந்தே தயார்ப்படுத்துவது மிகமிக அவசியமானதாகும். அதற்காக அவர்களது பாடத்திட்டத்திலும் இன்னும் செயன்முறைகளிலும் காலநிலையை துல்லியமாக அறிதல் அதிலேற்படும் மாற்றங்கள் அதனாலான விளைவுகள் எவ்வாறு தடுப்பது என்பன பற்றிய அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்படல் வேண்டும்.

விவசாய பெருமக்களுக்கு அவ்வப்போது காலநிலை மாற்றத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தும் கட்டமைப்பு வடபகுதியில் நிறுவப்படல் வேண்டும். வானிலை ஆய்வுத்திணைக் களம், பல்கலைக்கழகங்கள், தனியார் நிறுவனங்கள், விவசாயிகளின் அமைப்புக்கள் இணைந்த செயலணி உருவாக்கம் மிகவும் அவசியம். அனைவரும் இணைந்த நிறுவனமயமாக்கலின் ஊடாக இனி வருங்காலத்து பிரச்சினைகளை முன்கூட்டியே அனுமானித்து அதுவும் துல்லியமாக கணித்து அதனை முற்கூட்டியே வெளிப்படுத்தும் நிலைக்கு நாம் வந்தாலன்றி அதன் தாக்கத்திலிருந்து எவரும் தப்பிவிட முடியாது. யாழ்ப்பாணத்தில் வந்த நிஷா புயலின் பாதிப்பை உணர்ந்தவர்களுக்கு இந்த செய்தியும் அதனது தேவைப்பாடும் முழுமையாக விளங்கும். பிரச்சினைகளை துணிந்து எதிர்கொள்ள தயாராவதே தற்காலத்துக்கும் எதிர்காலத்துக்கும் எம்மால் செய்யக்கூடிய கைமாறாக அமையும். வாருங்கள் எமது வளத்தையும் எமது சந்ததியையும் காத்து எமது நாட்டில் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் இழப்புகளை குறைத்து அல்லது தவிர்த்து வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்பவும் வரும் பேரிடர்களை எதிர்கொள்ளும் தைரியத்தையும் மனப்பக்குவத்தையும் எம்மவர்களிடையே [illegible]

## இன்று ஒரு தகவல் 97



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# உலகம் நல்லதா? கெட்டதா?

உலகம் ரொம்பவும் கெட்டுப் போச்சு சேர். அந்தக் காலத்திலே எல்லாம் இந்த மாதிரி அக்கிரமம் நடக்குமா? என்று சொல்லி சலித்துக்கொள்ளுபவர்கள் கொஞ்சப் பேர்.

இந்த உலகம் ரொம்பவும் முன்னேறி இருக்கிறது சேர். அடுத்த கிரகத்திற்கு போய் வீடு கட்டலாமா என்று யோசிக்கிற அளவுக்கு வந்து விட்டோமோ என்று சொல்லுபவர்கள் கொஞ்சப் பேர்.

அது சரி நியமாகவே இந்த உலகம் நல்லதா? கெட்டதா? கொஞ்சம் நிதானமாக யோசிச்சு பாருங்கள். உங்களுக்கு ஏதாவது பதில் கிடைக்குதா. அப்படி சரியாக ஒரு முடிவுக்கு வர முடியவில்லை என்றால் கவலைப்பட வேண்டாம்.

வாங்க ராமகிருஷ்ணரிடம் போவோம். அவர் இந்த கேள்விக்கு பதில் சொல்லி இருக்கிறார் ஒரு சின்ன கதை மூலமாக. உலகம் நல்லதா கெட்டதா என்று ஒருத்தர் பெரியவரை பார்த்து கேட்டிருக்கிறார். அதுக்கு அந்த பெரியவர் கேள்வி கேட்டவரையே நிமிர்ந்து பார்த்து, அதற்கு நான் பதில் சொல்லுகிறேன் அதற்கு முன்னால் நான் ஒரு கேள்வி கேட்கிறேன் அதற்கு நீ பதில் சொல்லு என்றார்.

சரி கேளுங்க என்றார் அவர். பூனைக்கு பல் இருக்கே அது நல்லதா கெட்டதா என்று கேட்டார்

இதைக் கேட்டதும் அவர் குழம்ப ஆரம்பித்தார். என்னது! நாம் உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டோம். அதற்கு இவர் பூனையின் பல் நல்லதா கெட்டதா என்று நம்மிடமே கேள்வி கேட்கிறார் என்று யோசித்தார். இவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதன் பின்பு அந்த பெரியவர் விளக்கம்கொடுத்தார். ஒரு பூனைக்கு இருக்கிற பல் நல்லதா கெட்டதா என்று கேட்டால் என்ன பதில் வரும் யாரிடம் அந்த கேள்வியை கேட்கிறோமே அதற்கு தகுந்த மாதிரி தான் பதில் வரும்.

பூனை என்பது நல்லதா கெட்டதா என்று அந்த பூனையோட குட்டியிடம் கேட்டால், அது என்ன பதில் சொல்லும். என் அம்மாவிடம் இருப்பது வெறும் பல் இல்லை. அது கருணையோட வடிவம். அந்த பல்லாலே தான் எனது அம்மா என்னைக் கௌவி தூக்குவார். பாதுகாப்பான இடங்களுக்கு என்னை தூக்கி கொண்டு போவது என் அம்மாவின் பல் தான். அது இல்லை என் றால் நான் இல்லை என்று தான் குட்டிப்பூனை பதில் சொல்லும்.

ஆனால் இதே கேள்வியை ஒரு எலியிடம் போய் கேளுங்கள். பூனைக்கு பல் இருப்பது நல்லதா கெட்டதா என்று. அது என்ன சொல்லும். பல்லா அது? எமன். கடவுள் பூனையைப் படைத்ததோட விட்டு இருக்கக் கூடாதா? அதற்கு பல்லையும் எதற்காக படைத்தார். குத்தூசி மாதிரி. அந்த பல்லோட கொடுமை என்ன என்பது கடிபடுகிற எனக்கு தானே தெரியும் என்று புலம்பும் எலி.

பூனையின் பல்லை குட்டிப்பூனை பார்க்கிற பார்வை ஒரு மாதிரி எலி பார்க்கிற பார்வை ஒரு மாதிரி. அதே மாதிரித் தான் இந்த உலகம் நல்லதா? கெட்டதா? என்று கேட்டால் இந்த உலகத்தின் தன்மையை பார்க்கிறவர்களை பொறுத்தது.

அது இந்த உலகம் உள்ள வரைக்கும் இதை நல்லது என்று சொன்னவர்களும் இருப்பார்கள். கெட்டது என்று சொல்பவர்களும் இருப்பார்கள். எப்பவும் சந்தோசமாக இருக்கிற 2 பேர்.சந்தித்து கொண்டார்கள். உங்கள் சந்தோசத்திற்கு என்ன காரணம் என்று ஒருத்தரை ஒருத்தர் பார்த்து விசாரித்துக் கொண்டார்கள்.

என் அத்தை மகள் என்னை தான் திருமணம் செய்து கொள்ளுவேன் என்று உறுதியாக சொல்லி விட்டாள். அது தான் சந்தோசமாக இருக்கிறேன் என்றார் ஒருத்தர். என் அத்தை மகள் என்னைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று உறுதியாக சொல்லிவிட்டாள். அதனாலே தான் சந்தோசமாக இருக்கிறேன் என்றார் இன்னொருத்தர். இரண்டும் இரண்டு விதமான பார்வை!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவு தினம்

என் அன்பு நண்பன்

## அமரர். அருச்சுனன் ஸ்ரீஸ்கந்தராசா



தோற்றம் 26 - 11 - 1958

மறைவு 29 - 04 - 2023

சொந்தத்தில் வந்தமர்ந்த போதிலும்
தோளோடு தோள்நின்ற தோழனாய்
பந்தங்கள் பல பேசி நின்றவனே
பார்விட்டுப் போனதும் கனத்திருந்தேன்
அந்தமே இல்லாத நண்பனாய்
ஆழமாய் எந்நெஞ்சில் குடியிருப்பாய்
இனி எப்பிறப்பில் உன்னை காண்பேனோ
என்றும் உன்பிரிவால் கலங்கிநிற்கும்

அன்பு நண்பன்
ந.நாகேஸ்வரன்

குஞ்சன் தோட்டம்,
கொற்றாவத்தை,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

(C-0153)


## அன்னை பூபதியின் ஊர்தி வவுனியாவை வந்தடைந்தது



(வவுனியா)

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதியின் 36 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் அவரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி நேற்று வவுனியாவை வந்தடைந்த நிலையில் பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அன்னைபூபதியின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ள நிலையில் நேற்று வவுனியாவை வந்தடைந்தது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் போராட்ட பந்தலுக்கு முன்பாக அஞ்சலிக்காக நிறுத்தப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து பொங்குதமிழ் நினைவுத் தூபி, பண்டார வன்னியன் நினைவு சதுக்கம், கோவில் குளம், ஈச்சங்குளம், வவுனியா வடக்கு உள்ளிட்ட பல பகுதிகளில் சென்றதுடன், அஞ்சலி நிகழ்வுகளும் இடம் பெற்றன. (நி-250)

## வவுனியாவில் 376 குடும்பங்களுக்கு இலவச குடிநீர் இணைப்பு



(வவுனியா)

வவுனியா, கற்பகபுரம் கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் இணைப்பு கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் கே.மஸ்தானால் இலவசமாக நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

இதன் மூலமாக வவுனியா கற்பகபுரம் கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பெறுவதில் மக்கள் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து இருந்தனர். இது தொடர்பில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் கவனத்திற்கு மக்களால் கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்து, 376 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இலவச குடிநீர் இணைப்பு இராஜாங்க அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், வடமாகாண தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையின் சிரேஷ்ட சமூகவியலாளர் கோபிநாத் மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (நி-250)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3091

நிர்மலன்




டொறின்




பாபு




சித்திரா




விக்ரம்




அனு




உங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர் 457



மரக்கலம் அவர்களை விட்டுத் தூரத் தூரப் போய்க் கொண்டிருந்தது. படகு அவர்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்தது. முதலில் பின்னால் ஒதுங்கி நின்ற பூங்குழலி ஆர்வங்காரணமாகச் சிறிது நேரத்துக்குள் முன்னால் வந்து விட்டாள்.

இளவரசருடைய மனக் கவலைகளுக்கிடையே பூங்குழலியின் ஆர்வம் அவருக்குக் களிப்பை ஊட்டியது. அவர் முகத்தில் குறுநகை ததும்பியது.

அவர் மனக் கவலை கொள்ளக் காரணங்களும் நிறைய இருந்தன. தூரத்திலே போய்க் கொண்டிருந்த கப்பலில் தாமும் போயிருக்க வேண்டும் என்றும் அது தன்னை விட்டுவிட்டுத் தூரதூரப் போய்க் கொண்டிருந்ததாகவும் அவருக்குத் தோன்றியது. அதுமட்டும் அன்று கிட்ட நெருங்கி வந்து கொண்டிருந்த படகிலே ஒரு ஆள் குறைவாயிருந்ததாகக் காணப்பட்டது.

இருக்கவேண்டிய ஒருவர் அதில் இல்லை. ஆம் அதோ சேனாதிபதி இருக்கிறார் திருமலையப்பர் இருக்கிறார். உடன் வந்து வீரர்கள் இருக்கிறார்கள் படகோட்டிகள் இருக்கிறார்கள். ஆனால் அந்த வாணர் குலத்து வாலிபனை மட்டும் காணோம். வல்லத்தரையன் எங்கே? அந்த உற்சாக புருஷன், அஸகாய சூரன், அஞ்சா நெஞ்சம் படைத்த தீரன், இளையபிராட்டி அனுப்பி வைத்த அந்தரங்கத் தூதன் எங்கே? இரண்டு நாள் தான் பழகியிருந்த போதிலும் இளவரசருக்கு நெடுநாள் பழக்கப்பட்ட நண்பன் போல் அவன் ஆகியிருந்தான். அவனுடைய குணாதிசயங்கள் அவ்வளவாக இளவரசருடைய மனத்தைக் கவர்ந்திருந்தன. அவனைப் படகில் காணாததும் அரிதில் கிடைத்த பாக்கியத்தை இழந்தது போல் இளவரசருக்கு வேதனை உண்டாயிற்று.

படகு இன்னும் நெருங்கிக் கரையோரம் வந்ததும் சேனாதிபதி முதலியவர்கள் தாவிக் கரையில் குதித்தார்கள். சேனாதிபதி பூதி விக்கிரமகேசரி ஓடிவந்து இளவரசரைக் கட்டிக் கொண்டார்.

"ஐயா! நல்ல காரியம் செய்தீர்கள் எங்களை இப்படிக் கதிகலங்க அடிக்கலாமா! யானையின் மதம் எப்படி அடங்கிற்று? இந்த பொல்லாத யானை இப்போது எவ்வளவு சாதுவாக நின்று கொண்டிருக்கிறது! இளவரசே! எப்போது இங்கே வந்து சேர்ந்தீர்கள்? பழுவேட்டரையர்களின் கப்பல்களைப் பார்த்தீர்களா? அவை எங்கே?" என்று கொடும்பாளூர் பெரிய வேளார் கேள்விமாரி பொழிந்தார்.

"சேனாதிபதி! எங்கள் கதையைப் பின்னால் சொல்கிறேன். வந்தியத்தேவர் எங்கே? சொல்லுங்கள்!" என்றார்.

"அந்தத் துடுக்குக்காரப் பிள்ளை அதோ போகிற கப்பலில் போகிறான்!" என்று சேனாதிபதி தூரத்தில் போய்க் கொண்டிருந்த கப்பலைக் காட்டினார்.

"ஏன்? ஏன்? அது யாருடைய கப்பல்? அதில் ஏன் வந்தியத்தேவர் போகிறார்?" இளவரசர் கேட்டார்.

"ஐயா! எனக்குப் புத்தி ஒரே கலக்கமாயிருக்கிறது. இந்த வைஷ்ணவனைக் கேளுங்கள்! இவனுக்கு உங்கள் சமாசாரத்துடன் அந்த வாலிபன் சுபாவமும் தெரிந்திருக்கிறது!" என்றார்.

இளவரசர் ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, "திருமலை! வந்தியத்தேவர் ஏன் அக்கப்பலில் போகிறார்? தெரிந்தால் சீக்கிரம் சொல்லுங்கள்!" என்றார்.

### நாற்பத்தேழாம் அத்தியாயம்
### பேய்ச் சிரிப்பு

இளவரசரும் பூங்குழலியும் யானை மீது ஏறிச் சென்ற பிறகு, பின் தங்கியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை நாமும் வாசகர்களுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்.

"யானைக்கு மதம் பிடித்து விட்டது!" என்று சேனாதிபதி கூச்சலிட்டதைக் கேட்டு மற்றவர்களும் அப்படியே முதலில் நம்பினார்கள். யானையைப் பின் தொடர்ந்து குதிரைகளை வேகமாக விட்டுக்கொண்டு போகப் பார்த்தார்கள். ஆனால் அது இயலுகிற காரியமாயில்லை.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ஒரு வாய் பேரம்

(நேற்றைய தொடர்ச்சி...)

என்னோடு வருவதானால் அந்த காசும் உனக்கு வேண்டாம், அதை என்னிடமே தந்துவிடு நான் உனக்கு நல்ல காசைத் தருகிறேன் என்றான் கிழவன்.

நூறு தங்கக்காசுகளா! நிஜமாகவே நீ நல்லவன் தான். வா, உன்வீடு எவ்வளவு தூரம்? அட தூரம் என்ன, நூறு தங்கக் காசு கிடைக்கும் என்றால் ஆயிரம் மைல் நடக்கமாட்டேனா என்ன!" என்றான் பொன்னன்.

அதெல்லாம் வேண்டாம். இதோ, மூன்று மைல்தான் என் வீடு" என்றான் முதியவன். பொன்னன் தான் வாங்கிய தங்கக் காசை அவனிடமே திருப்பித் தந்து விட்டு, நூறு காசுகளை வாங்கிக் கொள்வதற்காக அவனோடு போனான்.




மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக் கொண்டிருந்த பொன்னன் வழியெல்லாம் என்னென்னவோ பிதற்றிக் கொண்டே போனான். சந்தோஷம் தாங்காமல் வெடித்தே விடுவான் போல் இருந்தது பொன்னனுக்கு. நூறு தங்கக் காசுகளை வைத்துக் கொண்டு என்னவெல்லாம் செய்வேன், தெரியுமா? என்று கேட்டான்.

நான் எப்படிச் சொல்ல முடியும்!" என்றான் முதியவன். ராஜாவின் அரண்மனையை விட ஜோராய் ஒரு கோட்டை கட்டுவேன். அப்புறம் ராஜாவையே, உன் பெண்ணை எனக்குக் கல்யாணம் கட்டிக்கொடு என்று கேட்பேன் என்றான்

கெனவே கல்யாணமாகி, ஒரு பெண்ணும் இருக்கிறாளே ! அதனால் என்ன? திரும்பவும் கல்யாணம் செய்கிறேன். இந்த முறை இளவரசியையே கட்டிக் கொள்வேன்!

ஓஹோ, பலே, பலே! இதற்குள் நகரமும் வந்து விட்டது. இருவரும் அரசனின் அரண்மனைக்கு எதிரில் வந் தார்கள்.

நேரே அரண்மனை வாயிலுக்குக் கிழவன் போவதைப் பார்த்து, அந்தப் பக்கம் ஏன் போகிறாய்? என்று பொன்னன் கேட்டான். அது தான் என் வீடு என்றான் கிழவன். கிழவனை உன்னிப்பாய்ப் பார்த்தான் பொன்னன். திடீரென அடையாளம் புரிந்து விட்டது. அவன் அரசனே! மாறுவேடத்தில் இருந்ததால் முதலில் அடையாளம் தெரியவில்லை.

பொன்னன் வாயடைத்து நின்றான். அப்பொழுது அரசன் மிக மரியாதையுடன் சொன்னான் சிறு இசை வாணியின் பெரும் புகழ்த் தந்தையே, இப்போது நீ செல்லலாம்! உன் மகளின் பாட்டு எனக்கு ஐந்து நிமிட நேரத்திற்கு ஆனந்தம் கொடுத்தது. பதிலுக்கு, நூறு தங்கக் காசுகள் என்ற வாக்குறுதியால், நான் உனக்கு ஒரு முழு மணி நேரத்திற்கு ஆனந்தம் தந்தேன் அல்லவா?

உன் மகள் வாயால் பாடிய பாட்டு எனக்கு ஆனந்தம் கொடுத்தது. என் வாயால் கொடுத்த வாக்குறுதி உனக்கு ஆனந்தம் அளித்தது. இது நியாயமான பேரம்தானே! அப்புறம், என்னுடைய ஆனந்தத்துக்குப் பின், நீ உன் பேராசையைக் காட்டியதால், எனக்கு ஏமாற்றம் வந்தது.

நம் பேரத்தை மேலும் நியாயமாக்குவதற்கு, என்னுடைய ஆனந்தத்துக்குப் பிறகு உனக்கும் ஏமாற்றம் வரும்படி செய்து விட்டேன். இனி நடையைக் கட்டு. கிடைத்த ஒரு தங்கக் காசும் போயிற்றே என நொந்த மனத்துடன்பொன்னன் சொந்த ஊர் திரும்பினான்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். - யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கச்சதீவு விவகாரத்தில் பொறுப்பற்று கதையாதீர்கள்

இந்தியப் பொதுத் தேர்தலில் கச்சதீவு விவகாரம் பேசுபொருளாகியுள்ளது.

அதிலும் கச்சதீவு விவகாரத்தை பாரதிய ஜனதாக் கட்சி ஊதிப்பெருக்கிறது எனப் பலரும் கருதுகின்றனர்.

ஆனால் உண்மை அதுவன்று. தமிழகக் கடற்றொழிலாளர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுகின்றனர். கைது செய்யப்படுகின்றனர். அவர்களின் படகுகளும் மீன்பிடி உபகரணங்களும் பறிமுதல் செய்யப்படுகின்றன. இருந்தும் இந்திய மத்திய அரசு அது விடயத்தில் பாராமுகமாக உள்ளது என முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட முன்னேற்றக்கழகம் குற்றச்சாட்டை முன்வைத்தது.

இந்தக் குற்றச்சாட்டு தமிழகத்தில் பாரதிய ஜனதாக் கட்சிக்கு மிகப்பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் எனக் கருதப்பட்டது.

இவ்விடத்தில்தான் பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை, திராவிட முன்னேற்றக்கழகத்தின் குற்றச்சாட்டை முறியடிக்க வியூகம் அமைக்கிறார்.

அந்த வியூகத்தைப் பலப்படுத்த கச்சதீவு விவகாரம் தொடர்பாக, தகவல் அறியும் சட்டத்தின் கீழ் முக்கியமான ஆவணங்களையும் காரணங்களையும் பெற்றுக் கொள்கிறார்.

அவ்வளவுதான். கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்துக் கொடுத்தவர் முன்னாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி. அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்தவர் கலைஞர் கருணாநிதி.

தவிர, கச்சதீவை காங்கிரஸ் இலங்கைக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும்போது, கலைஞர் கருணாநிதி மௌனம் சாதித்தார். அவர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தால், கச்சதீவைக் காப்பாற்றியிருக்க முடியும்.

கச்சதீவை இலங்கைக்குத் தாரைவார்த்ததனாலேயே இப்போது தமிழக மீனவர்கள் மிகப்பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் கச்சதீவை மீட்டெடுக்கின்ற முயற்சியில் ஈடுபடும் என அண்ணாமலை கூற; அதனைப் பிரதமர் மோடியும் ஆமோதிக்க கச்சதீவு விவகாரம் என்றுமில்லாதவாறு சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஆக, கச்சதீவு விவகாரம் என்பது இந்தியப் பொதுத் தேர்தல் சார்ந்த விடயம் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

இந்தப் புரிதல் இருக்குமாயின், கச்சதீவு விவகாரம் குறித்து தமிழகத்தில் அரசியல் கட்சிகள் முன்வைக்கின்ற கருத்துக்கள் தொடர்பில் நாம் மௌனமாக இருப்பதுதான் புத்திசாலித்தனம்.

ஏனெனில், கச்சதீவு விவகாரம் குறித்து இந்தியத் தேர்தலில் முன்வைக்கப்படுகின்ற விடயம் தொடர்பில் இலங்கை அரசாங்கமே பதிலளிக்க வேண்டும்.

அது விடயத்தில் இலங்கை அரசாங்கம் மௌனமாகவே இருக்கிறது.

இதை நாம் கூறும்போது கச்சதீவு எங்கள் கடற்றொழிலாளர்களின் பயன்பாட்டுக்குரிய இடம்.

எனவே நாம் தான் அது தொடர்பில் கதைக்க வேண்டும் என யாரேனும் கருத்துரைக்கலாம்.

ஆனால் இலங்கையிடம் இருந்து கச்சதீவை இந்தியா மீளப் பெறுவதை இலங்கை அரசாங்கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டாது.

ஏனெனில் அதற்குள் பூகோள அரசியல் நுட்பங்கள் நிறையவே உண்டு.

எனவே இந்தியப் பொதுத் தேர்தல் முடியும் வரை கச்சதீவு பற்றி நாம் மௌனமாக இருப்பதுதான் பொறுப்பான செயலாகும்.

## இலங்கை – இஸ்ரேல் விமான சேவை மீண்டும் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இஸ்ரேலுக்கான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த தகவலை இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இஸ்ரேல் மீது கடந்த 13 ஆம் திகதி ஈரான் ஏவுகணை தாக்குதல் நடத்தியதால், வான் வெளி மூடப்பட்டு தற்காலிகமாக நிறுத்தப்பட்ட விமான சேவைகளே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் கொழும்பிலிருந்து டெல் அவிவ் நகருக்கு நாளை வியாழக்கிழமை காலை ஆர்க்கியா என்ற விமானம் தனது பயணத்தை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## முட்டை விலை அதிகரிப்பினால் கேக் உற்பத்தி பாதிப்பு

(கொழும்பு)

முட்டையின் விலை அதிகரிப்பினால் பண்டிகை காலங்களில் பேக்கரி உரிமையாளர்கள் கேக் உற்பத்தி செய்யவில்லை என பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் பெரியளவிலான பேக்கரிகளின் உரிமையாளர்களே சுமார் 25 சதவீதமளவில் கேக் உற்பத்திகளை மேற்கொண்டதாக சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தற்போது சந்தையில் முட்டையொன்றின் விலை 55 ரூபாவாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எரிபொருள் விற்பனை இலங்கையில் அதிகரிப்பு

### எரிசக்தி அமைச்சர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் மாதாந்த எரிபொருள் விற்பனை அதிகரித்து வருவதாக மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர சுட்டிக்காட்டியுள்ளார். அமைச்சர் தனது எக்ஸ் கணக்கில் குறிப்பொன்றை இட்டு இதனை குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி மார்ச் மாதத்தில் எரிபொருள் விற்பனையில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டுள்ளதோடு இந்த நாட்டில் எரிபொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் மாதாந்த அறிக்கைகளையும் அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

எவ்வாறாயினும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் சங்கத்தை மேற்கோள் காட்டி, இந்த நாட்டில் எரிபொருளின் விலை ஐம்பது வீதத்தால் குறைந்துள்ளதாக முன்னர் செய்திகள் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

## இன்றைய ஆட்டம்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கலைமதி அணியை எதிர்த்து சென்சேவியர் அணியும் பிற்பகல் 4.30 மணிக்கு யங்கயன்ஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணியும் மோதவுள்ளன. (நி-90)

## கோட்டை புகையிரத நிலையத்தின் நடைபாதையில் மோதிய ரயில் சாரதி பணியிடை நீக்கம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முதலாவது மேடையில் ரயிலொன்று மோதி விபத்திற்குள்ளான சம்பவத்துடன் தொடர்புடைய ரயில் சாரதி பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளின் பின்னர் குறித்த பணியிடை நீக்கம் இடம்பெற்றுள்ளதாக ரயில்வே பொதுமுகாமையாளர் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை சிலாபம் நோக்கி பயணிக்கவிருந்த ரயிலே ரயில் நிலையத்தின் முதலாவது மேடையில் மோதி விபத்திற்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ம-7.10)

## நீர்த்தேக்கத்தில் மூழ்கி மூவர் உயிரிழப்பு

(கண்டி)

கண்டி - தெல்தெனிய, கும்புக்கந்துர பகுதியில் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் மூழ்கி பெண் ஒருவர் உள்ளிட்ட மூவர் உயிரிழந்துள்ளனர்.

திஹாரிய பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட இளம் தம்பதியினர் தெல்தெனிய பகுதியிலுள்ள தமது உறவினர் வீட்டிற்கு சென்றிருந்த போது விக்டோரியா நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்றுள்ளனர் எனவும் அங்கு எதிர்பாராத விதமாக அவர்கள் நீரில் மூழ்கியுள்ளனர்.

இந்நிலையில் குறித்த தம்பதியை காப்பாற்றுவதற்காக நீர்த்தேக்கத்தில் குதித்த திகனை – அளுத்வெல்ல பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபரொருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

## ஒவ்வொரு மாதமும் 130 சிறுநீரக நோயாளர்கள் அனுராதபுரத்தில் கண்டறிவு

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் 130 புதிய சிறுநீரக நோயாளர்கள் கண்டறியப்படுவதாக அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் சிறுநீரக நோய் நிபுணர் மருத்துவர் நடிகா விக்கிரமாராச்சி தெரிவித்துள்ளார்.

அதன்படி 2019 மற்றும் 2023 இற்கும் இடையில், அனுராதபுரம் மாவட்டத்தில் கிட்டத்தட்ட இருபதாயிரம் சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், அந்த காலகட்டத்தில், சுமார் நான்காயிரம் சிறுநீரக நோயாளிகள் இந்த நோயினால் இறந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

மேலும், கடந்த வருடம் 1,200 புதிய சிறுநீரக நோயாளர்கள் பதிவாகியுள்ளதாகவும் அவர்களில் அதிகமானோர் ஆண்கள் எனவும் வைத்தியர் தெரிவித்தார்.

மேலும் அந்த பகுதிகளில் கிடைக்கும் நீரின் பயன்பாடு, வறட்சியான காலநிலையால் ஏற்படும் நீர்ச்சத்து குறைபாடு மற்றும் மரபியல் பரவல் போன்றவையும் சிறுநீரக நோய்க்கு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## வெளிநாடு சென்றுள்ள 485 பேரின் ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தம்

(கொழும்பு)

இலங்கையில் இருந்து வெளிநாடு சென்றுள்ள 485 பேரின் ஓய்வூதியம் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டுக்கான செல்லுபடியாகும் உயிர் வாழ்ச் சான்றிதழை வழங்காத காரணத்தால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியம் பெறுவோர் தொடர்ந்து ஓய்வூதியம் பெறுவதற்கு ஆண்டுக்கு ஒருமுறை உயிர்வாழ் சான்றிதழை ஓய்வூதியத் திணைக்களத்திடம் வழங்குவது கட்டாயமாகும்.

இல்லையெனில் ஓய்வூதியத் தொகையை நிறுத்த ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

இதேவேளை, 2023 ஆம் ஆண்டு 1061 பேரின் ஓய்வூதியம் செல்லுபடியாகும் சான்றிதழ் வழங்காத காரணத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், அதில் 576 பேர் சான்றிதழைப் புதுப்பித்துள்ளனர்.

மேலும், 2022ஆம் ஆண்டு செல்லுபடியாகும் உயிர்வாழ்ச் சான்றிதழ் வழங்காததால், 2833 பேரின் ஓய்வூதியம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, இதுவரை 1250 பேர் மட்டுமே தங்கள் சான்றிதழை புதுப்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், செல்லுபடியாகும் சான்றிதழ்கள் வழங்கப்படாமையால் அவர்களின் ஓய்வூதியம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அதனை மீண்டும் செயற்படுத்துவதற்கு ஓய்வூதியம் பெறுவோர் உரிய சான்றிதழ்களை தூதரகத்திற்கு தனிப்பட்ட முறையில் வழங்க வேண்டும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும் ஆங்கிலேயர் ஆட்சிக் கால முற்பகுதி (1796-1832)

பகுதி IV

11

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆயினும் ஆள்பதி அக்கழகத்தின் சொற்படியேநடக்க வேண்டுமென்ற நியதியில்லை.

**நிர்வாகச் சீர்திருத்தங்கள்**

இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடானதுடன் வர்த்தக சங்கத்துடனிருந்த சகல தொடர்புகளும், நிராகரிக்கப்பட்டன. நோத் தனக்கு இடையூறுகளை விளைவித்தவரும், சீர்திருத்தங்களுக்கு எதிர்ப்புக் காட்டி நின்றவருமான சென்னை அலுவலாளரை இந்தியாவுக்குத் திருப்பியனுப்ப முடிந்தது.

நோத், அடுத்த ஆண்டுகளில் இலங்கைக்கென ஒரு பிரத்தியேக குடியியற் சேவையைத் தாபிப்பதில் அயராது உழைத்து வெற்றி கண்டார். 1801, 1802 ஆம் ஆண்டுகளில் இங்கிலாந்திலிருந்து 20 குடியியற் சேவையாளர் அனுப்பப்பட்டனர். இவர்களும் 1798 இல் நோத்துடன் வந்தவர்களும் சென்னை ஆட்சியிலிருந்து எஞ்சிய சிலரும் - எல்லாமாக 45 பிரித்தானியர் புதுக் குடியியற் சேவையின் உறுப்பினராயினர்.

1802 தொடக்கம் நோத் குடியியற் சேவையாளரின் சம்பளங்களையும், கடமைகளையும் ஒழுங்கு செய்வதில் காலத்தைச் செலவிட்டார். 1803 இல் நோத் ஓய்வுச் சம்பள முறையொன்றை வரைந்து, அதற்குக் குடியேற்ற நாட்டுச் செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றார். இவ்வொழுங்கு 1834 வரை அமுலிலிருந்தது.

நில அளவை திணைக்களம் நிறுவப்பட்டது. பொது மராமத்து திணைக்களமும் 1800 இல் ஆரமபித்தது. 1802 இல் அதற்கு பொறியியல் விற்பன்னர் ஒருவர் தலையதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1805 இல் நில அளவை திணைக்களமும், பொது மராமத்து திணைக்களமும் ஒன்றுபடுத்தப்பட்டன. 1800 இல் வைத்திய திணைக்களம் இராணுவ அமைப்பாக நிறுவப் பெற்றது.

**ஆங்கிலேயரின் கண்டிக்கெதிரான முதற்போர்**

1739ஆம் ஆண்டு தொடக்கம் கண்டி ராச்சியம் தென்னிந்திய மன்னர்களாற் பரிபாலிக்கப்பட்டு வந்தது. இவர்கள் நாயக்க மன்னர்களைச் சேர்ந்தவர்கள். இந் நாயக்க அதிபதிகள் விஜயநகர ராச்சியத்தின் சிறுசிறு பிரிவுகளை ஆண்டுவந்த குறுநில மன்னராவார். கண்டியில் இவர்கள் ஆண்ட பொழுது அரசசபையில் அவர்களின் இனசன பந்துக்களே பெரிதும் ஆதிக்கம் பெற்றிருந்ததால் ஒரு அளவுக்குச் சுயேச்சையாயிருந்த சிங்கள அதிகாரிகள் இம்மன்னர்களை விரும்பவில்லை.

மேலும் சிங்கள அதிகாரிகள் தம்முள் பரஸ்பரம் பொறாமை கொண்டு பிணங்கியிருந்தார்கள். அதனால் நாயக்க மன்னரின் ஆட்சி நிலைத்திருந்தது. கீர்த்தி சிறீ அரசுகட்டிலேறியபொழுது நாயக்க மன்னரைத் தொலைத்துவிடுவதற்கான ஒரு சூழ்ச்சி நடைபெற்றது. ஆனால் அது சித்தி பெறவில்லை. இருந்தும் சிங்கள மன்னன் ஒருவனைச் சிங்காசனமேற்ற முயற்சி செய்த கட்சியின் பலம் கெட்டுப் போகவில்லை.

இக்கட்சிக்கு சிங்கள முதற் பிரதானியான பிலிமத்தலாவை தலைமை தாங்கித் தானே அரசனாவதற்கும் முயன்றான். இராஜாதி ராஜசிங்கன் இறந்ததும் இவன் சிங்காசனமேறச் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. தான் நினைத்த படியெல்லாம் ஆட்டிவைக் கலாமென்று நினைத்துக் கொண்டு பிலிமத்தலாவை சிறீவிக்ரமராஜசிங்கனை அரியாசன மேற்றினான்.

தனது சூழ்ச்சிகட்கு எதிராக நின்றவர்களை நாட்டைவிட்டுக் கலைத்தான். சிலரைச் சிறையிலிட்டான். வேறுசிலரைக் கொலைக்களத்திற் பலியிட்டான். எல்லாம் செய்தபின்னர் தன்னை அரசனாக்கிக்கொள்வதற்காக பிரித்தானியரின் துணையையும் நாடினான்.

அக்காலத்தில் இலங்கைத் தேசாதிபதியாயிருந்த பிரெடரிக் நோத் (1798-1805) என்பவர் சிறீவிக்ரமராஜசிங்கனை அரசனாக ஒப்புக் கொண்டு விட்டபடியால் பிலிமத்தலாவையின் கோரிக்கைக்கு இணங்க முடியாமற்போய்விட்டது. மேலும் பிரெடரிக் நோத் கண்டி ராச்சியத்தின்மீதான ஆதிக்கத்தைப் பெற மிகவும் விரும்பினார்.

பிலிமத்தலாவையுடன் சம்பாஷணை நடத்திய நோத்கண்டியரசனின் உயிருக்கு ஆபத்துண்டாகுமென்பதை அறிந்து கண்டியில் ஒரு பிரித்தானிய பட்டாளத்தை வைப்பதற்கான உடன்படிக்கைக்கு அரசனைச் சம்மதிக்கச் செய்யுமாறு பிலிமத்தலாவையைத் தூண்டினார்.

ஆனால் அரசன் தனக்கு அப்படியான ஆபத்து ஒன்றும் ஏற்படாது என நினைத்தான். பிலிமத்தலாவையின் ஆதரவைக்கூட அரசன் கைவிட்டுவிட்டான். பிரித்தானியரின் பாதுகாப்பைப் பெறுவதற்கான ஒரு மனநிலையில் அரசன் இருக்கவில்லை. பிரித்தானியரைத் தவிர வேறு எவராலும் அவனுக்கு ஆபத்து ஏற்படக் கூடிய நிலைமையிருக்கவில்லை. நோத் தேசாதிபதியின் யோசனையால் தனக்கு எவ்வித நன்மையுமில்லையென்று நினைத்து அதை அவன் நிராகரித்துவிட்டான்.

ஆனால் பிலிமத்தலாவையின் பேராசைத் தீ தணியவில்லை. நோத் தனக்கு உதவிசெய்ய மாட்டான் என்பதை அறிந்த பிலிமத்தலாவை அரசனுக்கும் பிரித்தானியருக்குமிடையில் சண்டையை மூட்ட எண்ணினான். கண்டி ராச்சியத்தில் கொட்டைப்பாக்கு வியாபாரம் நடத்திய பிரித்தானிய பிரஜைகளான சில சோனக வியாபாரிகளின் சாமான்களைப் பறித்தெடுக்குமாறு சிலரைப் பிலிமத்தலாவை ஏவினான். அவ்விடயம் அவ்வாறே நடந்தது.

எதிர்பார்த்த வண்ணமே நோத் தனது பிரஜைகளைச் சரியாக நடத்தாதற்கு ஆட்சேபனை தெரிவித்து அவர்களுக்குண்டான நட்டத்தை ஈடு செய்யுமாறு கண்டி அரசனைக் கேட்டான். ஆனால் நோத்தேசாதிபதியின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. நோத்உள்ளே ஆய்ந்தோய்ந்து பாராமல் கண்டியரசன் மீது போர் தொடுத்தான். முன்னே கேட்ட உடன்படிக்கைகளுக்கு அரசனை இனியாவது இணங்க வைக்கலாமென நோத் எண்ணினார்.

நோத் தேசாதிபதி காரியசாத்தியமான விடயங்களை எண்ணி நடத்தும் திறமையற்ற ஒருவராக காணப்பட்டார். கண்டிராச்சியத்தைப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கைப்பற்றத் தவறியது எதனால், அரசனைத் தம்மாதிக்கத்திற் கொண்டுவர அவர்களால் ஏன் முடியவில்லை. என்ற இன்னோரன்ன விடயங்களை நோத் ஆழ்ந்து ஆலோசிக்க வில்லை.

இவ் விடயங்களைப் பற்றிச் சிந்திக்காது போர் தொடுத்தனர். பிரித்தானியப் படைகள் இரண்டு வழியாகக் கண்டியை அடைந்தது. போர்த்துக்கேயர் பலான வழியாகச் சென்று கண்டியைத் தாக்கினர்கள். இப்பாதை கஷ்டமானது ஆன படியால் பிரித்தானியர் இம்மார்க்கமாகச் செல்லவில்லை. வான் எக் என்ற டச்சுச் தேசாதிபதி போன பாதையைப் பின்பற்றி பிரித்தானிய பட்டாளத்தின் ஒரு பகுதி போய் கலகேதரைக் கணவாயைத் தாண்டி முன்னேறிற்று. மற்றது திருகோணமலையிலிருந்து புறப்பட்டு மாத்தளை வழியாகப்போய் பலக்கடுவைக் கணவாயைத் தாண்டிச் சென்றது. இரண்டு பட்டாளமும் கட்டுகாஸ் தோட்டையிற் சந்தித்துக் கண்டியைக் கைப்பற்றின.

ஆனால், கண்டியரசன் ஹங்குறாங்கெத்தைக்குப் பின்வாங்கிவிட்டான். காட்டுப்பாதையாக வந்தபடியால் பிரித்தானிய பட்டாளத்தைச் சேர்ந்தவர்களுக்குக் காட்டுக் காய்ச்சல் பிடித்துக் கண்டியிலேயே ஒவ்வொரு நாளும் பலர் இறந்து போனார்கள். அதன் பின்னர் தென் மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றும் வீசத் தொடங்கிற்று. மழை பெய்து வெள்ளம் பெருகியதால் கொழும்புக்குச் செல்லும் பாதைகள் எல்லாம் துண்டிக்கப்பட்டன.

நோய் ஒரு புறம். உணவுப் பஞ்சம் இன்னொரு புறமாக பிரித்தானியப் படைகள் செய்வதறியாது நிர்ப்பந்தமான நிலைமையில் சரணடைந்தது. ஈற்றில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்களெல்லாரையும் கண்டி வாசிகள் கொன்றுவிட்டார்கள். பிலிமத்தலாவையின் தந்திரத்தாலும் நோத் தேசாதிபதியின் புத்திக் குறைவாலும் ஏற்பட்ட இந்த யுத்தம் இவ்வாறு முடிவுற்றது.

இவ்விதமாய் உண்டான வெற்றியினால் தூண்டப்பட்ட கண்டியரசன் வழக்கம்போல பிரித்தானியப் பிரதேசங்களை எல்லாத்திக்கிலும் தாக்கினான். பிரித்தானியப்படைகள் இத்தாக்குதல்களை முறியடித்தது. இதேபோன்ற தருணங்களில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் செய்தது போல இவர்களும், தமது பட்டாளங்களைக் கண்டி ராச்சியத்துக்குள் அனுப்பி வீடு வாசல்களையும் பயிர்களையும் அழித்து வந்தார்கள்.

நோத் தேசாதிபதிக்குப்பின் அப்பதவியை ஏற்ற சேர் தோமஸ் மேய்ட்லந்து (1805-1812) இம்மாதிரியான கொள்ளைகள் நடக்கவிடாமல் தடுத்தார். அரசனும் பிரித்தானிய தேசாதிபதியுடன் திருப்தி கரமான ஓர் உடன்படிக்கைக்குவர முடியவில்லை.

**நோத் பதவியைத் துறத்தல்**

இதற்கிடையில் கண்டிப் படையெடுப்பு நோத்தினுடைய திறமைக் குறைவினால் அனுகூலமடையவில்லையென்ற செய்தி இங்கிலாந்தைப் போயடைந்தன. பாராளுமன்றத்தில் கேள்விகள் கேட்கப்பட்டதுமன்றி அதனைப்பற்றி விசாரணையொன்று நடாத்த வேண்டுமென்றும் வற்புறுத்தப்பட்டது. இதன் பயனாக 1805 இல் நோத் தனது பதவியைத் துறக்கவேண்டிய கட்டாய நிலை எழுந்தது. நோத், 1805 இல் பதவியைத் துறந்து தாயகம் திரும்பினர்.

நோத்தினுடைய ஆட்சியில் பல குறைகள் இருந்த போதிலும் இலங்கைவாழ் மக்கள் அவருக்கு நன்றியுடையவர்களாயிருக்கப் பல காரணங்களுண்டு. (தொடரும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20 விபத்து...

ஏப்ரல் 12 முதல் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியிலேயே இந்த விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை, பட்டாசு வெடித்தல் உட்பட பண்டிகைக் காலத்தில் இடம்பெறும் திடீர் அனர்த்தங்களின் எண்ணிக்கை இம்முறை குறைவடைந்துள்ளது. (ம-7,10)

## தமிழரசுக்...

லில் தமிழ்க் கட்சிகளால் முன்மொழியப்பட்டுள்ள பொது வேட்பாளர் விடயம் சம்பந்தமாகவும் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக, திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் அதற்கு முன்னதாக வழக்கு விடயங்களை கையாள்வது தொடர்பில் ஏகோபித்த நிலைப்பாட்டை எடுப்பதற்கு முனைவதாக கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (ம-7,10)

## காதலியையும்...

சேர்ந்த யுவதி ஒருவரை ஒரு தலைப் பட்சமாக காதலித்து வந்த நிலையில் வீட்டாரிடையே முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று அதிகாலை வீட்டு வளவினுள் புகுந்து மலசலகூடத்தினுள் ஒழிந்திருந்த இளைஞன் அதிகாலை 5 மணியளவில் வீட்டில் உறங்கிய நிலையில் இருந்த காதலியையும் காதலியின் தாயாரையும் வெட்டிவிட்டு தப்பிச் சென்று யுவதியின் வீட்டின் அருகேயுள்ள வளவொன்றினுள்ள மரமொன்றில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, இளைஞனின் சடலமும் தூக்கிட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையினை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,10,33)

## மனித உரிமை...

பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணையின் பின்னர் ஆலய செயலாளர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்திருந்தார்.

நாங்கள் தொல்லியல் இடங்களை சேதப்படுத்தியதாக தொல்பொருள் திணைக்களத்தினர் சில ஆவணங்களை வழங்கியிருந்தனர்.

குறிப்பாக மலை உச்சியில் தீ மூட்டப்பட்டதையடுத்து கைது செய்யப்பட்டதாக தெரிவித்தார்கள்.

"நாங்கள் அதனை எரித்தமைக்கான எந்த ஆதாரங்களும் சமர்ப்பிக்கப் படவில்லை. அத்துடன் அவர்களது கருத்துக்களில் முரண்பாடுகள் காணப்பட்டன.

தீ மூட்டியதாக இவர்கள் புகைப் படம் ஒன்றைக் காட்டினார்கள். அந்தப் புகைப்படம் முதல்நாள் இரவில் அங்கு காவல் கடமைகளில் இருந்த நெடுங்கேணி பொலிஸாரின் செயற்பாடு.

அதற்கான சான்றுகளை நாம வெளிப்படுத்தியிருந்தோம். அந்த புகைப்படத்தினையே அவர்கள் இங்கு சமர்ப்பித்திருந்தார்கள். இது முற்றிலும் பொய்யானது. இதனை நாம் சுட்டிக் காட்டினோம்" எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை தொடர்ச்சியாக இடம்பெறவுள்ளதுடன், எதிர்வரும் நாட்களில் நெடுங்கேணி பொலிஸார் மற்றும் வனவளத் திணைக்களத்தினரும் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,10)

## சர்வோதய...

சர்வோதய இயக்கத்தின் ஸ்தாபகரான கலாநிதி ஏ.டி.ஆரியரத்ன நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 92.

1931ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5ஆம் திகதி காலி மாவட்டத்தின் உனவடுன பிரதேசத்தில் பிறந்த ஆரியரத்ன இலங்கை அரசியலிலும் சமூக அபிவிருத்தியிலும் தொடர்ச்சியாகச் செயற்பட்டவர். (ம-7,10)

## ஜனாதிபதி...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரை தம்மால் பெயரிட முடியாது.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதனை பெயரிடுவது மிகவும் சவால்மிக்க விடயமாகும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியிலிருந்து ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நியமித்தால் அந்தப் பதவிக்கான கனவில் காத்திருக்கும் ஏனையவர்கள் தன்னுடன் கோபித்துக் கொள்வார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே கட்சியின் பொருத்தமான ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் பொறுப்பு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் மத்திய செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த தெரிவித்துள்ளார். (ம-7,10)

## தப்பியோடிய...

செய்யப்பட்டுள்ளனர்.

களவு குற்றத்துக்காக சிறைத்தண்டனை பெற்று வந்த கைதியும் விளக்கமறியல் கைதி ஒருவருமே இவ்வாறு செவ்வாய்க்கிழமை காலையில் தப்பியோடியிருந்தனர்.

இந்நிலையில் விரைந்து செயற்பட்ட சாவகச்சேரி பொலிஸார் 30 நிமிடங்களுக்குள் இருவரையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது தப்பியோடிய குற்றத்துக்காக இருவருக்கும் தலா 6 மாத சாதரண சிறைத் தண்டனையும் தலா 1500 ரூபாய் தண்டப்பணமும் விதித்ததுடன் தண்டப்பணம் செலுத் தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக மேலுமொரு மாத கால சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும் எனவும் சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் ஏ.யூட்சன் உத்தரவிட்டிருந்தார். (ம-7,10,30)

## தனியாருடன்...

மாவட்டங்களுக்கு செல்லும் இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் இணைந்த நேர அட்டவணையில் பயணிக்க முடியும். ஆனால் இணைந்த சேவையை குறித்த தரிப்பிடத்தில் இருந்து வழங்க முடியாது

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வட மாகாண ஆளுநர் செயலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வட மாகாண ஆளுநர் ஆகியோர் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பேருந்து சங்கம் ஆகியவற்றுடன் புதிய பேருந்து தரிப்பிடத்தில் இணைந்த சேவையை வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

குறித்த கலந்துரையாடலில் புதிய பேருந்து தரிப்பிடத்தில் இருவரும் இணைந்த சேவையை வழங்குவது தொடர்பில் வலியுறுத்தப்பட்ட நிலையில் தொழிற்சங்கங்கள் இணைந்த சேவைக்கு சம்மதிக்க மறுக்கின்றன.

அதற்கான காரணங்களும் வலுவாக இருக்கிறது உதாரணமாக வவுனியா பேருந்து தரிப்பிடத்தில் பெரும்பாலான வெளி மாவட்டத்துக்கான சேவையை வழங்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் உள்ளே செல்லாது வெளியில் நின்றே பயணிகளை ஏற்றுகின்றன.

இலங்கை போக்குவரத்துச் சபை சாரதிகள் நடத்துநர்கள் தனியார் பேருந்து சாரதி நடத்துநர்களால் தாக்கப்பட்ட சம்பவங்கள் பல தீர்க்கப்படாமல் நிலுவையில் உள்ள நிலையில் அவர்களுடன் இணைந்து சேவையில் ஈடுபடுவது பல்வேறு நெருக்கடிகளை சந்திக்கக்கூடும் என தொழில் சங்கங்கள் எண்ணுகின்றன.

வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகள் தனியாருடன் இணைந்த நேர அட்டவணையில் பயணிப்பதற்கு எமது விருப்பத்தை தெரிவித்துக் கொள்வதோடு இணைந்த சேவையை புதிய பேருந்து தரிப்பிடத்தில் மேற்கொள்வதற்கு சங்கங்கள் விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,10)

# சுகாதார அமைச்சுக்கு சொந்தமான 679 வாகனங்களைக் காணவில்லை

(கொழும்பு)

சுகாதாரத்துறையில் இடம்பெற்ற மருந்துப் பொருள் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் இலஞ்ச மோசடிகள் தொடர்பில் வெளியான அம்பலத்தினால் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் பல சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சக்தி பெரும் போராட்டத்தை நடத்தி திருடர்களை நீதிமன்றில் நிறுத்தியது.

மருந்துப் பொருள் மோசடி குறித்து பலர் பேசினாலும், சுகாதார அமைச்சுக்குச் சொந்தமான 679 வாகனங்கள் காணாமல் போயுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிவித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இதில் 240 வாகனங்கள் குறித்த சில தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் சுகாதார அமைச்சு மேலதிக தகவல்களை கணக்காய்வு அலுவலகத்திற்கு ஒப்படைக்க வில்லை.

மேலும் 439 வாகனங்கள் குறித்து எந்த தகவலும் இல்லை. வங்குரோத்தான நாட்டில் கூட இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அரச நிறுவனங்களில் இவ்வாறான பல முறைகேடுகள் காணப்படுவதால், இந்த மோசடிகள், திருட்டுகள் ஒவ்வொன்றும் தெளிவாக விசாரிக்கப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படும், இதற்கான நடவடிக்கைகளை எமது ஆட்சியில் முன்னெடுப்போம் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ம-7,10)

## முன்னாள்...

கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பாலித தெவரப்பெரும ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் களுத்துறை பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஆவார். (ம-7,10)

## பெரமுன...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவும் ஐ.தே.கவும் இணைந்து போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவேட்பாளராக ரணிலே களமிறங்குவார் எனத் தெரியவருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு பல கட்சிகளுடன் இணைந்து பரந்த கூட்டணியில் போட்டியிடுவதற்கான இணக்கப்பாட்டுக்குள் வந்துள்ளதாக அக்கட்சியின் வட்டாரங்களில் அறிய முடிகிறது.

முதற்கட்டமாக இரு பிரதான கட்சிகளுக்கும் இடையில் கொள்கையளவிலான உடன்பாடுகளை எட்டுவதற்கான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருவதாகவும், இரு கட்சிகளுக்கும் தேசிய கொள்கைகள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படாமையினால், விரைவில் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், பேச்சுவார்த்தை முடிந்த பின்னரே இறுதி முடிவு எட்டப்படும் என்று இரு கட்சிகளின் வட்டாரங்களும் தெரிவித்தன.

"இணக்கப்பாடு எட்டப்பட்டால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக பொதுச் சின்னத்தில் போட்டியிடுவோம்.

இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து ஜனாதிப்தி வேட்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவார்." என அக்கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி ரணிலை விக்கிரமசிங்கவை பல தடவைகள் சந்தித்தும் சாதகமான தீர்மானம் எதுவும் எடுக்க முடியாமல் போனதால், தேர்தல் தொடர்பில் முடிவெடுக்க ஜனாதிபதிக்கு அனுமதியை வழங்கியுள்ளார்.

எவ்வாறாயினும், எதிர்வரும் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன ஏற்கெனவே வீடு வீடாகச் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இந்த பின்புலத்திலேயே இரு கட்சிகளுக்கும் இடையிலான ஒப்பந்த மொன்றை மேற்கொள்ளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NORTH LANKA IIT CITY CAMPUS

**மாபெரும் புலமைப்பரிசில் - 2024**

**ரூ. 15,000/= இலிருந்து ரூ. 50,000/=**

வரை அள்ளிச் செல்லுங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

**இறுதித் திகதி : 12.05.2024**

U.G.C. அங்கீகாரம்
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அங்கீகாரம்
கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் அங்கீகாரம்
IAU வின் அங்கீகாரம்
UNESCO அங்கீகாரம்
WHED யின் அங்கீகாரம்
இலங்கை கல்வி அமைச்சின் அங்கீகாரம்

**பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

**British Qualfication Certificate course - duration - 1 year**



- Computer Science
- Agriculture Science
- English Language (IELTS)
- Business Management
- Political Science
- Physical Education & sports

**Diploma - 1-2 years**

- Computer Science
- Agriculture Science
- English Language (IELTS)
- Political Science
- Physical Education & sports
- Business Management

**Advance Diploma - 1-2 years**

- Computer Science
- Agriculture Science
- Physical Education & sports (for sports coachers)
- English Language
- Political Science
- Business Management

(C-0151)

**Degree programmes (Top -up) - 1 year**



- Computer Science
- Agriculture Sciences
- B.Ed.
- Business Management (BBA)
- BA in English
- BA in Political Science
- Physical Education & sports

புதிய பிரிவு ஆரம்பம் LLB 3 Years (A/L 3 Passes or Any Degree)

**Master Degree - 1 year**

- MSc in Computer Science
- MSc in Agriculture Science
- M.Ed,
- MBA
- MA in English
- MA in Political Science

M.Sc in Physical Education & sports

IELTS - Courses

Doctor of Philosophy (PhD) (Education, philosophy,

Jaffna - 076 750 4535/ 077 884 9677
Vavuniya - 076 750 4535/ 077 884 9677
Bandarawalla - 076 750 4535/ 077 884 9677
Batticalo - 076 750 4535/ 077 884 9677
Trincomalle - 076 750 4535/ 077 884 9677
Hatton - 077 169 7722/ 077 802 9999

North Lanka IIT Top Floor, Peples's Bank Building, Stanley Road, Jaffna
T.P:076 750 4535/ 077 884 9677

Lanka City Campus Batticaloa.
T.P:076 750 4535


# கொத்து ரொட்டி வியாபாரி கைது

வெளிநாட்டவர் ஒருவரிடம் இருந்து கொத்துரொட்டி ஒன்றுக்கு 1900 ரூபா வசூலித்த வீதியோர உணவு வியாபாரி ஒருவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு மாநகரில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கூடுதல் நிதி வசூலித்ததோடு அவரை துன்புறுத்தியதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ம-7.10)


## தேவை

ஆங்கில அறிவும் Computer அறிவும் தெரிந்தவர்கள் தேவை. வயதெல்லை எதிர்பார்க்கப்படமாட்டாது. ஓய்வூதியம் பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை.

**021 222 5686, 076 424 7111, 071 415 0995**

**Expo Net Overseas Consultants**
345, Kasthuriyar Road, Jaffna. (293)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1978 ஆம் ஆண்டு, கேட்டை நட்சத்திரம், 11 இல் சூரியன், செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு : (461)

**075 617 8008**

## வேலைவாய்ப்புக்கள்

யாழ் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல்யமான கம்பனிக்கு A/L படித்த இளைஞர், யுவதிகளுக்கு பயிற்சிக் காலத்தில் (3 மாதம்) ஊக்குவிப்புக் கொடுப்பனவுடன் வேலை வாய்ப்புக்கள் நேர்முகத் தேர்விற்கு தொடர்பு கொள்ள: (465)

**076 231 8693**

Techna
Technical institute
Smart thinking leads to innovate

வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.

**A/L தொழினுட்பப்பிரிவு**

**A/L 2024 DAY CLASS ஆரம்பம்**

17.04.2024 புதன்கிழமை, மாலை 3.30 மணிக்கு

| | |
|---|---|
| உயிர்முறைமைகள் தொழினுட்பவியல் | - M.விஷ்ணு, P.நிறோஜனன் |
| பொறியியல் தொழினுட்பவியல் | - S.மயூரதன் |
| தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம் | - S.சக்தி |
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் (ICT) | - T.லவன் |
| விவசாய விஞ்ஞானம் | - S.சஜீபன் |
| கணிதம் 07 | - T.சசிகரன் |
| புவியியல் | - S.P.கரன் |

(473)


A/L 2025, 2024 பிரிவுகள் நடைபெறுகின்றன.

2025 பிரிவினருக்கான BSTவகுப்புக்கள் **இலவசமாக** நடைபெறுகின்றது.

**077 170 3549**


# 33 ஆவது பிறந்த தினமும் 8 ஆம் ஆண்டு நினைவு தினமும்

மலர்வு 17 . 04 . 1991



உதிர்வு 15 . 04 . 2016

## தனபாலசிங்கம் வசீகரன் (Engineer)

சித்திரை மாதம் 17ம் திகதி உதிர்ந்த என் அன்பு மகனே வசீகரா!

நான் உன்னை ஓர் பொக்கிசம் போலவும் எவ்வளவு ஆசைகள், கனவுகளோடும் வளர்த்து வந்தேன். ஒன்றுமே நிறைவேறாமல் போய்விட்டன. ஆனால் விதி உன்னை கொல்லவில்லை சதி செய்து உன்னை கொன்று விட்டார்கள். என்னை விட்டு பிரிந்து 8 ஆண்டுகள் ஆனாலும் எனக்கு எட்டு நாட்கள் போல் இருக்கின்றன. நண்பர்களுக்கு நல்ல நண்பனாய் உன் கடமைகளை சீரும் சிறப்புடனும் பேரும் புகழுடனும் மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் பெரியவர்களை மதித்து நடப்பதிலும் சகோதர சகோதரிகளுக்கு அன்பு சகோதரனாய் சித்தி, சித்தப்பாமார்களுக்கு அன்பு மகனாய் வளர்ந்து வந்தாய். நான் இந்த மண்ணை விட்டு போகும் வரை உன் நினைவுகளும் பேச்சுக்களும் என்றுமே மாறாது.

வி.எம்.றோட், பருத்தித்துறை.

துன்ப துயரங்களோடு உன் பிரிவால் வாடும் பாசமிகு அம்மா...

(C-0150)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.